Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1105)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (20.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 80










## அரசியல் தீர்வு தொடர்பில் அரசு - ஈ.பி.டி.பி. பேச்சு

(கொழும்பு)

அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதில் அரச குழுவில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜி.எல். பீரிஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரஜீவ விஜயசிங்க, சஜின்வாஸ் ஆகியோரும் ஈ.பி.டி.பி. கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல், மாகாணங்களுக்கு வழங்குவதற்கு அனுகூலமான நிலமைகள் உருவாக்கப்படும் வரை அது மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட முடியும் என்ற கோரிக்கைகள் உட்பட்ட மகஜர் ஈ.பி.டி.பி. சார்பில் அரச குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## குற்றச்செயல்களைத் தடுக்க தவறிவிட்டனர் பொலிஸார்

### ஆசிய மனித உரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு

உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த சில காலமாக நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராயும் போது இந்த விடயம் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் கொள்கை வகுப்புப் பிரிவின் பணிப்பாளர் பசில் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

தமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை பொலிஸாருக்கு கிடையாது என்ற மனோபாவம் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நிலைமைக்கு சட்டத்துறையில் இருக்கும் அதிகாரிகள் நேரடியாகப் பொறுப்புக் கூறவேண்டும் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவிக்கையில், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்து ஆதாரமற்றது. குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்தார்.

## வடக்கில் தொடரும் அடைமழை பல்லாயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அனர்த்த முகாமைத்துவ சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வன்னிப் பெருநிலபரப்பிலுள்ள இரணைமடு குளத்தின் பத்து வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதுடன், ஏனைய அனைத்துக் குளங்களும் வான் பாய்ந்து வருகின்றன. இதனால் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டு சில கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் பத்து வரையான நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 368 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன. இதேவேளை இப்பகுதியில் மூவாயிரம் குடும்பங்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்; மாதகல் மீனவரின் தொழில் நாசம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளால் உள்ளூர் மீனவர்களது 21 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் வெட்டி சேதப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு தினங்களாக நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் மாதகல் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டன. இதன்போதே மேற்படி மீன்பிடி வலைகள், வெட்டிச் சேதமாக்கப்பட்டன.

நேற்று அதிகாலை வரை இந்திய இழுவைப் படகுகள், மாதகல் கடற்பரப்பினுள் நின்றதனால் தாம் தமது தொழில் நடவடிக்கையை கைவிட்டு கரை திரும்பியதாக மாதகல் மீனவர்கள் தெரிவிததனர். அத்துடன் தற்போதைய சீரற்ற (15 ஆம் பக்கம் பார்க்க)

## எட்டுவயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

வீட்டில் நித்திரையில் இருந்த 8 வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு மழை வெள்ளத்தில் போட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்திற்கு ஆளாகிய சிறுமி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் குறித்த சிறுமியின் வீட்டிற்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த சிறுமியை பலாத்காரப்படுத்தியதாகவும், தாய், தந்தையை (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஆணைக்குழு அறிக்கை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் அறிக்கையைத் தமிழ்த தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதுடன் அவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளவும் முடியாத ஒன்றென முன்னணியின் உப தலைவரும் அதன் வெளிவிவகாரப் பேசசாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்.நகரில் நேற்று நடைபெற்றஅக்கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேறகணண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஒருவருடத்திற்கு மேலாக நாம் கூறிவந்தது போன்று நடந்தவற்றை மூடி மறைத்து முற்றாக புலிகளையும் தமிழ் தரப்புகளையும் குற்றஞ்சாட்டுவதாக ஆணைக்குழுவின் அறிக்கை வெளி வந்துள்ளது. இந்நிலையில் சர்வதேசம (15 ஆம் பக்கம் பார்க்க)

## இணக்கமின்றித் தொடரும் அரசு - கூட்டமைப்பு பேச்சு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகும் அரசாங்கத்துக்கும் இடையில இடம்பெற்ற பேச்சுவார்த்தை இணக்கமின்றி முடிவடைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு காணி அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்பதை தமிழ்த (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவானார் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக ரணில் விக்ரமசிங்க மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் பெரும் பரபரப்பிற்கு மத்தியில் இடம பெற்றது. இவ் வாக்கெடுப்பில் 72 வாக்குகளைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்ரமசிங்க மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். இவரை எதிர்த்து தலைமைப் (15 ஆம் பக்கம் பார்க்க)



## காணாமற்போன மீனவரை தேடும்பணி தொடர்கிறது

மீன்பிடிக்கச் சென்ற மீனவப் படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். இச்சம்பவம் நேற்று முந்தினம் காலை 6 மணிக்கு முல்லைத்தீவு பகுதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் தீத்தக்கரை சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த சின்னையா சுமன் (வயது - 27) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே காணாமல் போனவராவார். இப பிரதேசத்தில் பலத்த மழையுடன் காற்று வீசியதன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதுடன் (15 ஆம் பக்கம் பார்க்க)

# அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் கிளை திறந்தது யாழ். நகரில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களின் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டைப் போக்கவும், தரமான மருந்துப் பொருட்கள் கிடைப்பதனை உறுதி செய்யவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கிளை ஒன்று யாழ்.நகரில் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.காங்கேசன்துறை வீதி, சத்திரச்சந்தி 149/1 இலக்க முகவரியில் அமைந்திருக்கும் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கும் இவ் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் 26 ஆவது கிளையினை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் பி.ஜி.மகிபால பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

நாடு பூராகவும் இத்தகைய 25 அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கிளைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. வட மாகாணத்தின் யாழ்.மாவட்டத்தில் இதன் 26 ஆவது கிளையே நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசா, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கே. சிவபாலன் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கிளையானது யாழ். நகரில் திறந்து வைக்கப்பட்டிருப்பதானது, யாழ்.மக்களுக்கு தரமானதும், நியாயமான விலையிலும், சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்படும் மருந்துப் பொருட்கள் கிடைப்பதனை இலகுபடுத்தியிருப்பதுடன், வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாக இருக்கும் மருந்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் எனவும், இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஏற்கனவே இக்கூட்டுத்தாபனத்தின் கிளை ஒன்றினை யாழ்ப்பாணத்தில் திறக்குமாறு சுகாதார அமைச்சைத் தான் கோரியிருந்ததாகவும், அதற்கு அமைவாக சுகாதார அமைச்சு இதன் கிளையை இங்கு திறந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (54, பா)

# 'முகிழ் 2011' ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தின் ஏற்பாட்டில் "சித்திரமும் வடிவமைப்பும்" அலகின் நான்காம் வருட மாணவர்களின் "முகிழ் 2011" ஓவியக் கண்காட்சி நாளை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சி நிகழ்வினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேலும், இக்கண்காட்சி தொடர்ச்சியாக இரு தினங்கள் நடைபெறும். ஆர்வலர்கள் தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இக் கண்காட்சியை பார்வையிட முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் படைப்புக்கள் யாவும் "சித்திரமும் வடிவமைப்பும்" இறுதியாண்டு மாணவர்களினால் யாழ். பல்கலைக்கழக கலையகத்தில் வைத்து உருவாக்கப்பட்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# கணினிப் பயிற்சி நிலையம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியாவில் கணினிப் பயிற்சி நிலையமொன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பிரிகேடியர் நாபாகொட ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

இந்த இலவச கணினிப் பயிற்சி நிலையத்தின் மூலமாக கற்குழி தேக்கவத்தை, மதவு வைத்தகுளம், தவசிகுளம் மூன்று முறிப்பு, ஈரப்பெரியகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் இலவசமாக கணினிப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச கணினிப் பயிற்சி நிலையத்துக்கு சிங்கப்பூர் மகா கருணா பௌத்த சங்கம் நிதியுதவி அளித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (125)

# அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு இன்று


தேசிய பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு முல்லைத்தீவு நகரில் நடைபெறவுள்ளது.

சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களில் இருந்து பொது மக்களையும், உடமைகளையும் பாதுகாக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த முள்ளிவாய்க்கால் கிழக்கு, கிராமசேவையாளர் பிரிவின் கடற்கரையோர கிராமங்களான வட்டுவாகல் தொடக்கம் முல்லைத்தீவு நகரம் வரை இவ் ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வினை ஐ.நா. பாதுகாப்பு நிதியமும் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையும் இணைந்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# இணுவில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பொது அமைப்புக்களால் பாராட்டிக் கௌரவிப்பு





(இணுவில்)

கலை கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடாத்திய தேசிய சிறுவர் நாடக விழாவில் விருதுகள் பெற்ற மாணவர்களை பொது அமைப்புக்கள் பாராட்டி, கௌரவித்த நிகழ்வு நேற்று முன்தினம் இணுவில் அறிவாலய மண்டபத்தில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் சு. சண்முககுமார் தலைமையில் இடம்பெற்றது.

குழந்தை சண்முகலிங்கம் எழுதிய "குட்டி அனுபவம்" என்ற நாடகம், ந.பரமேஸ்வரனின் இயக்கத்தில் இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. இந் நாடகத்திற்கே விருதுகள் வழங்கப்பட்டன.

கேதீஸ்வரன் பிரணவன், முத்துராசா சுவாகி ஆகியோர் அமைச்சிடம் இருந்து பணப்பரிசில்கள், சான்றிதழ்களைப் பெற்றனர். மேலும் நாடகத்தில் நடித்த ச.தமஸ்வினி, க.மதுரா, ப.கௌரீசன், ஞா.வானதி, அ.சௌஜன்னியா மற்றும் கதை உருவாக்கம், நாடக இயக்கம் என்பவற்றிக்குமாக சான்றிதழ்களும், நினைவுப்பரிசில்களும் வழங்கப்பட்டன. மேற்படி நாடகத்தில் பங்குபற்றிய சிறுவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக இணுவில் பொது அமைப்புக்களால் இப்பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகமும், பால் நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழுவும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை (ரி.சி.ரி) நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கை யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக யாழ்.போதனா வைத்தியசாலை உள மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி ச.சிவயோகன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர்கள் செல்வி. கோசலை மனோகரன், குமாரவடிவேல், குருபரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

# ஒளி விழா

நல்லூர் பிரதேச செயலக ஒளி விழா நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நத்தார்தின செய்தி மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (26)

# மக்கள் பங்கேற்புடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் நடாத்தப்படும் ஜே/108 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் செட்டித்தெரு வீதியில் அமைந்துள்ள நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்குபற்றி இப் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு அப்பிரிவு பொதுமக்களுக்கு யாழ்மாநகரசபை அழைப்பு விடுத்துள்ளது.

# சமுர்த்தி நிவாரணம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி முத்திரைப் பயனாளிகளுக்கான டிசம்பர் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரண விநியோகம் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பல நோக்குக கூட்டுறவுச் கூட்டுறவுச் சங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் நிவாரண விநியோகம் நிறுத்தப்படவுள்ளதால், சம்பந்தப்பட்ட பயனாளிகள் உரிய காலத்திற்குள் சங்கங்களுக்குச் சென்று தமக்கான பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக சமுர்த்தி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (26)

# வாழ்வாதார கடன் வழங்கும் புதிய செயற்திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

நுண்கடன் செயற்பாடுகளினூடாக வருமானம் குறைந்த வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் ஓர் முகாமைத்துவ திட்டமாக வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலையம் ஆளுநரால் ஸ்தாபிக்உகப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. கௌரவ ஆளுநரின் விசேட நிதி ஒதுக்கீட்டினூடாகவும் வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டினூடாகவும் இந்நிலையத்தினது சுழற்சி நிதியினூடாகவும் 8660 வருமானம் குறைந்த மற்றும் மீள் குடியேறிய மக்களுக்கு ரூபா 263 மில்லியன் கடந்த மூன்று வருடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையத்தினூடாக 3029 பயனாளிகளுக்கு ரூபா 106 மில்லியன் தனது சுழற்சி நிதியினூடாகவும் 759 பயனாளிகளுக்கு ரூபா 23 மில்லியன் மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டினூடாகவும் 2011 ஆம் ஆண்டில் நுண்நிதிச் சேவையினை வழங்கியுள்ளது. மேலும் ஆளுநரின் விசேட நிதி ஒதுக்கீட்டினூடாக 11 கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 20 மில்லியனை சிறு கைத்தொழில் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் இலகு கடனாக 2011 ஆம் ஆண்டில் இந்நிலையத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந் நிலையம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 128 மில்லியனை தனது சுழற்சி நிதியினூடாக 3500 பயனாளிகளுக்கு நுண்நிதிச் சேவையினையும் 5 சங்கங்களுக்கு இலகு கடன் சேவையினையும் வழங்கத் திட்டமிட்டுள்ளது.


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் - 2012

**2012 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு மாநகரசபை அலுவலகம், இல.585/5, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். பிரதான பொது நூலகம், இல.15, முற்றவெளி வீதி, யாழ்ப்பாணம். ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தின் போது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.**

**திருமதி.யோ.பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாணம்.**

(C/1134)

## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முனகூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

உறவு, செல்வம், இளமை, இவை அனைத்தையும் காலன் ஒரு கணத்தில் விழுங்கிவிடுவதால் பொய்யானவற்றைத் துறந்து விடு இறைவனை முழுமையாக நம்பி அவனது சிந்தனையில் மூழ்கிவிடு.

- ஆதிசங்கர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மழை கொடுக்கும் கொடை!

மூன்று நாட்களுக்கு மழை இருக்கும் என்று அறிவித்தார்கள். வழக்கம் போல அவர்களைப் பொய்யாக்கி விட்டு, பொய்யா மழை குடாநாட்டில் தொடர்ந்து கொட்டுகிறது. மகிழ்ச்சியடையத்தான் முடியவில்லை. விவசாயிகளுக்குக் கூட அளவுக்கு மிஞ்சி மழை பொழிந்தால் அது மகிழ்ச்சிக்குரியதில்லை. பயிர்கள் நாசமாவதுதான் மிச்சம். ஆக, மின்னுற்பத்தி நிலையங்களுக்கான நீரேந்து பகுதிகளில்தான் கனமழை பெய்வதால் அடுத்த வருடத்துக்கு மின் தட்டுப்பாடு குறையக் கூடும்.

அலுவலகப் பணிகள் நிமித்தம் நகர்ப் பகுதிகளில் வசிக்க நேர்பவர்களுக்கு மழையால் ஏற்படும் இடைஞ்சல்கள்தான் ஏராளம். குடையின்றி மழைக் கோட்டின்றி வெளிவர முடியா நிலைமை ஒரு புறம், வெளியே வந்தால் நரகல்கள் கரைந்தோடும் தெருக்களில் நடப்பதே சேர்க்கஸ் வித்தையாகி விடும்.

அரை நாள் மழை பெய்தாலே சாலைகள் கரைந்து காணாமல் போவதும் மீதி குழிகள் வெள்ளங்களுக்குள் வாகனங்கள் குலுங்கப் போவதையும் வாடிக்கையான விஷயமாக மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். குண்டும் குழியுமாகிவிடும் வீதிகளையும் அதில் பயணம் செய்வதால் நேரும் விபத்துகளையும்கூட சகித்துக் கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு வந்துவிட்டது. ஆனால் வீதிகள் தோறும் தேங்கும் குப்பை கூழங்கள் மக்களை மேலும் சோதிப்பவையாகி விடுகின்றன.

குப்பைகளிலிருந்து புறப்பட்டு வீதிகளில் ஆங்காங்கே செத்த எலிகளை காகங்கள் குதறிக் கொண்டிருப்பதும், நாய்களும் மோட்டார் சைக்கிள்களும் உடைந்திராத ஓர வீதிப்பகுதிகளுக்காக வாரோட்டமிடுவதும், குழிகளில் விழுந்தெழுந்து சேறு பூசி ஹோலிப் பண்டிகை கொண்டாடிச் சென்றுகொண்டிருக்கும் கார்களும் மழைக் காட்சிதான்.

யாழ்ப்பாணத்தில் ஒரு மழைக்குச் சிதைந்துவிடும் மற்றைய வீதிகளின் பரிதாப நிலையைப் பார்க்கும் போதுதான் காப்பெற் போடப்பட்ட வீதிகளின் முக்கியத்துவம் விளங்குகிறது. அடுத்த மழைக்காலத்துக்குள் எல்லா வீதிகளும் காப்பெற் ஆடையை அணிந்துகொண்டு விடாதா என்ற ஏக்கம் பிறக்கிறது.

அதேசமயத்திலேயே 50 கிலோ மீற்றருக்குக் குறைவான வீதிகளே தார் வீதிகளாகவும், மிகப்பெரிய வீதிகள் உட்பட மீதி வீதிகள் எல்லாம் கிரவல் வீதிகளாகவும் உள்ள வன்னியின் நிலைமை ஞாபகத்தில் வருகிறது. அங்கு திருத்த வேண்டிய செய்ய வேண்டிய பணிகள் இன்னும் ஏராளம் உள்ளன. உணர்ச்சிகரமான வசன அரசியலிலேயே காலத்தைக் கடத்தும் தமிழ்த் தீவிர அரசியல்வாதிகளை நினைத்தால் பெருத்த விசனம்தான் உண்டாகிறது.

மழைக்காலத்தின் பெரிய கொடுமை தடுமனிலிருந்து டெங்கு வரை நோய்கள் வந்து சேருவதுதான். பூச்சி புழுக்கள் வெளியேறி நம்மைக் குசலம் விசாரிக்க வருவது ஒருபுறமிருக்க, ஈரலிப்பைக் கண்டதும் தொற்றுநோய்க் கிருமிகளின் உற்சாகப் புறப்பாடுதான் சோதனை. நுளம்புகள் குதூகலமாகப் பாட்டுப் பாடிக்கொண்டே வந்து விடிய விடிய முழித்திருந்து நம்மைத் தாளம் தட்ட வைத்து விடுகின்றன. அவை ஓதும் தலையணை மந்திரத்தைக் கேட்டுக் கிறுகிறுத்து தூங்காமல் மிக நீளும் இரவுகளும் இந்த மழைக்காலம் பரிசளிப்பவையே.

யாழ்ப்பாணத்தில் இம்முறை நினைத்து நினைத்துப் பெய்யும் மழை, காலநிலை மாற்றத்தின் விளைவுதானோ என்று சந்தேகம் கொள்ள வைக்கிறது. பட்டம் விடுவதற்கு காத்திருக்கும் சிறுவர்களையும் தொடர்ந்து எரிச்சலூட்டியபடியே இருக்கிறது மழை.

எல்லாமிருந்தாலும், உலக மாந்தர்க்கு மழையின் முக்கியத்துவம் அனைத்துக்கும் மேலானது என்பதை நாமறிவோம். உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடிய நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயற்படுமாறு அறிவுறுத்துகிறான் வள்ளுவன். அதுதான் மனிதர்களுக்கு உயிர்ச்சக்தியை அளிக்கும் அமிழ்தம் என்கிறான்.

மன்னர்கள் காலத்திலேயே மழையைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்திருக்கிறார்கள்; நாம்தான் மழைக்குப் பயப்பட்டுக் கொண்டிருக்கிறோம். 'மழையே மழையே மெத்தப் பெய்' என்று மனப்பூர்வமாகப் பாடுவதற்கு ஏதுவாக எமது சூழலைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வோம்.

– ஆசிரியர் –

# நாடாளுமன்ற உறுப்பினர் தொகையை நுவரெலியாவிலும் குறைக்க சதித்திட்டம்

## - கூறுகிறார் மனோகணேசன் -

நுவரெலியா மாவட்டத்தின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் தமிழர்களாக இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு மாற்று வழியில் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்

பிறந்த தினத்தையிட்டு தன்னை சந்தித்த முன்னணியின் நுவரெலியா மாவட்ட மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தலைமையிலான மலையக ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது

ஒரு காலத்தில் யாழ் மாவட்டத்தில் பன்னிரண்டாக இருந்த ஒட்டுமொத்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இன்று ஆறாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு வாக்காளர் தொகையில் ஏற்பட்ட குறைவு காரணமாக காட்டப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பாகும்

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் மாற்றுவழிகளின் மூலமாக தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு திட்டம் தீட்டப்படுவதாக நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. தகுதியுள்ள தமிழர்களை வாக்காளர்களாக பதிவு செய்வதில் குளறுபடிகளை ஏற்படுத்தி தமிழ் வாக்காளர் தொகை அதிகரிக்கப்படாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறன.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தை தளமாகக் கொண்டு மலையகம் முழுக்க தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளில் திட்டமிட்டு பெரும்பான்மையினரை குடியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறன. தமிழர்கள் செறிவாக வாழ்வதை தடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரக்கூடிய புதிய தேர்தல் முறையின் கீழ் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை நுவரெலியா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்படும்

அரசாங்கத்திற்குள்ளே அமைச்சர்களாகவும், ஆதரவு அணியினராகவும் செயற்படும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மலையக அரசியல் கட்சிகளுக்கும் இது தொடர்பிலே பாரிய பொறுப்புகள் இருக்கின்றன. ஆனால் நமது மலையக தமிழ்ப் பிரதிநிதிகள் மலையகத்தில் தமிழ் சமூகம் எதிர்நோக்கும் ஆபத்துகளை உணர்ந்திருக்கின்றார்களா என்பது புரியவில்லை.

வாயைத்திறந்து பேசினால் ஜனாதிபதி கோபித்துக்கொள்வார் என்பதற்காக நமது மலையகப் பிரதிநிதிகள் வாய்களை திறப்பதில்லை. அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதன் மூலமாக நமது இனம் நன்மை பெற வேண்டும். ஆனால் ஆதரவையும் வழங்கிவிட்டு, நமக்கெதிராக நிகழ்த்தப்படும் அநீதிகளையும் கண்டு வாய்மூடி மௌனிகளாக இருப்பதில் அர்த்தமில்லை

அதைவிட எதிரணியில் அமர்ந்து உண்மைகளை துணிச்சலுடன் எடுத்துக் கூறுவது சாலச் சிறந்ததாகும். ஆளுமையுடன் செயற்பட்டு வரும் ஆபத்துக்களை தடுத்து நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் வாய்மூடி மௌனிகளாக இருப்பதற்கு கூட நமது மலையக அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்றத்தில் இடமிருக்கப்போவதில்லை.

# காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் வடக்கு கிழக்கில் அதிக பாதிப்பு ஏற்படும்

## – எச்சரிக்கிறது வானிலை அவதான நிலையம் –

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் வடக்கு, கிழக்கு பகுதிகள் அதிக பாதிப்புக்கு உள்ளாகக் கூடும் என வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

தற்போது பொலன்னறுவை மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக அங்குள்ள நீர்த்தேக்கங்கள் கலிங்கு மட்டம்வரை நிரம்பியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழை காரணமாக நீர்த்தேக்கங்கள் கலிங்கு மட்டம்வரை நிரம்பியுள்ளதால் பராக்கிரம சமுத்திரத்தின் 10 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன் அநுராதபுரத்திலுள்ள ராஜாங்கனை நீர்த்தேக்கம் மற்றும் மனக்கட்டிய நீர்த்தேக்கம் ஆகியவற்றின் வான்கதவுகளும் மட்டக்களப்பிலுள்ள உன்னிச்சை நீர்த்தேக்கம், பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காலநிலை சீரின்மையால் மீனவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

அசாதாரண காலநிலை காரணமாக கடலுக்குச் சென்ற முல்லைத்தீவு மீனவர்கள் 6 பேரைக் காணோம்.

முல்லைத்தீவு பகுதியில் கடற்றொழிலுக்கு நேற்றுக் காலை சென்ற மீனவர்கள் ஆறு பேர் இரவு வரை கரைசேரவில்லை. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு காணப்பட்டது.

முல்லைத்தீவு பகுதியில் நேற்று வானிலை அசாதாரணமாக காணப்பட்டது. கடும்காற்று, மழை என்பன காரணமாக வழக்கத்துக்கு மாறாக கடல் அதிக கொந்தளிப்புடன் இருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்ற மீனவர்கள் திரும்பி வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மனைவியின் சிறுநீரகத்தை விற்று வீடுகட்ட முயன்றவர் கைது

தெல்தெனிய பிரதேசத்தில், மனைவியின் சிறுநீரகத்தை விற்பனை செய்ய முயற்சித்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதியன் சேலாகே பாலித பண்டார என்ற 46 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளி ஒருவருக்கு 5 இலட்சம் ரூபாவிற்கு சிறுநீரகத்தை விற்பனை செய்ய குறித்த நபர் முயற்சி செய்துள்ளார். எனினும், சிறுநீரகத்தை விற்பனை செய்வதற்கு அவரின் மனைவி மறுப்புத் தெரிவித்ததையிட்டு, ஆத்திரமுற்ற சந்தேக நபர் மனைவியை கடுமையாக தாக்கியுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுநீரகத்தை விற்பனை செய்வதன் மூலம் மகளின் நோய்களை குணப்படுத்தவும் வீட்டைக் கட்டி முடிக்கவும் முடியும் என தெரிவித்து, சிறுநீரகத்தை விற்பனை செய்யுமாறு தம்மை பலவந்தப்படுத்தியதாக சந்தேக நபரின் மனைவி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஆறு மாத வீதி விபத்தில் 1300 பேர் மரணம்

இலங்கையில் இவ்வருடம் முதல் ஆறு மாத காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 20 ஆயிரத்து 713 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளதுடன் அவ் விபத்துக்களால் 1301 பேர் பலியாகியுள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் போக்குவரத்து பொலிஸ் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளொன்றிற்கு நாடளாவிய ரீதியில் 103 வாகன விபத்துகள் இடம்பெறுவதாகவும் அவ் விபத்துகளில் 07 பாரதூரமான விபத்துகளும், 17 கடும் காயங்களுக்கு உள்ளாகும் விபத்துகளும், 34 சிறு காயங்கள் ஏற்படும் விபத்துகளும், 45 வாகனங்களுக்கு மாத்திரம் சேதம் ஏற்படும் விபத்துக்களும் அடங்குவதாக போக்குவரத்து பொலிஸ் பிரிவு தரவுகள் மேலும் தெரிவிக்கின்றன.

## மரநாட்டு விழா

வவுனியாவில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் மரநாட்டு விழா இடம்பெற்றது. வவுனியா தாண்டிக்குளம் முதல் ஓமந்தை வரை நடைபெற்ற இந்நிகழ்வில் 500 மரங்கள் வீதியின் இருபுறமும் நட்டப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் துமிந்த திசாநாயக்க சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (125)

## போட்டோ கொப்பி இயந்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒஸ்மானியாக் கல்லூரிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனினால் போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இவ்வியந்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எம். இமாமின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வியந்திரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (105)

# சுற்றுச் சூழலைப் பாதிக்காதவாறு மண் அகழ்வு இடம்பெறவேண்டும்

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கிறவல், மணல் அகழ்வு நடவடிக்கைகள் விதிமுறைகளுக்கு ஏற்றவாறு செயற்படுத்துவதற்கும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி சுற்றுச் சூழல் அமைச்சின் வரவு செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில், வடக்குக் கிழக்குச் சுற்றுச் சூழலானது மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்புக்கள் மூன்று வகையாகக் காணப்படுகின்றன.

போரின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களாக, யுத்தத் தேவைக்காகவும் யுத்தத்தினாலும் இந்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், அங்குள்ள இயற்கை வளங்கள், காடுகள், ஆறுகளின் போக்குகள் என்பனபாதிக்கப்பட்டுள்ளன. யுத்த தேவைகளுக்காக அமைக்கப்பட்ட மண்ணணைகள் அங்குள்ள நிலஅமைப்பையே மாற்றியிருக்கின்றன. ஆகவே, இவற்றை நாம் மீளவும் சீர்படுத்தக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கவேண்டும்.


கடந்த யுத்தம் காரணமாக அங்கு கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்துக்கும்அதிகமான தென்னைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இயற்கை வளங்களானகாடுகள் மற்றும் பனைகள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு மீள்நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்குப் புறம்பாக யுத்தப் பாதிப்புக்களும் அங்கு சுற்றுச்சூழலைமிகவும் மோசமாகப் பாதித்திருக்கின்றன. சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தென்பகுதியில் பெருமளவுக்கு சீராக்கப்பட்டுள்ளன. யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கில் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த முடியாதிருந்திருக்கலாம். எனவே, விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு அந்தப் பாதிப்புக்களிலிருந்து விரைவாக அந்தப் பிரதேசத்தை விடுவிக்க வேண்டும்.

தற்போதைய புனர்நிர்மாண



மற்றும் அபிவிருத்திப் பணிகள் காரணமாகவும் அங்கு சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பூநகரி, அக்கராயன், புத்து வெட்டுவான், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி போன்றஇடங்களில் கிறவல், மணல் அகழ்வு நடவடிக்கைகள் அங்குள்ள நிலஅமைப்பையே மாற்றக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. அங்குள்ளநீர்த்தேக்கங்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் இத்தகைய பல்வேறு நிகழ்வுகள் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக கௌரவ அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றார்.





வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்திய தொழிற்பயிற்சி நெறிக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதனையும், பயிற்சியாளர் ஒருவருக்கு பிரதிப் பணிப்பாளர் சி. சிவகொங்காதரன் சான்றிதழ் வழங்குவதையும், அருகில் மாரீசன் கூடல் பாடசாலை அதிபர் நிற்பதையும் காணலாம். (06)

## ஒளிவிழா

(கோப்பாய்)

உறவுகளுக்கான பாலம் நிலயத்தினரின் ஒளிவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் செல்வபுரம் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 51ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஏ.பி.டி.ஈ. இசற் விக்கிரமரட்ன பிரதம விருந்தினராகவும், இலங்கை விலிவேர்ட் தேவாலய தேசிய நிர்வாகி லால் வண்டர் போல், வலி கிழக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், உரும்பிராய் ஜே/265 கிராம அலுவலர் கே. நகுலேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (135)

## திருடர்கள் கைவரிசையால் வவுனியாவில் மக்கள் அச்சம்

வவுனியாவில் இரவு வேளைகளில் இடம்பெற்று வரும் திருடர்களின் கைவரிசையினால் மக்கள் அச்சத்தில் வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது

வவுனியாவின் மீள்குடியேற்றக் கிராமமான மரையடித்தகுளம் வீடொன்றினுள் நேற்று முன்தினம ஞாயிற்றுக்கிழமை அதிகாலை புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த 36 பவுண் நகைகளையும் கையடக்கத் தொலைபேசியையும் திருடிச்சென்றுள்ளதாக குறித்த பகுதிக் கிராமசேவகர் க.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் மீள்குடியேற்ற பகுதியான இக்கிராமத்தின் வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இதன் காரணமாக இப்பகுதி மக்கள் தமது பணத்தினையும் நகைகளையும் பாதுகாப்பதற்கு சிரமப்படுகின்றனர்

நகைகளை திருட்டு கொடுத்தவர் தலையணையினுள் நகைகளை வைத்து பாதுகாத்து வந்த நிலையிலேயே திருடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வாரம் வவுனியாவின் புறநகர்ப் பகுதியான கணேசபுரம் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான பலசரக்குக் கடையொன்று உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டதுடன் தவசிகுளம் பகுதியிலும் வர்த்தகர் ஒருவருடைய வீட்டினுள் புகுந்து நகை மற்றும் பணம் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளிகளில் சுகாதாரம்

அடுத்த வருடம் முதல் முன்பள்ளிகளிடையே அதிகூடிய சுகாதார நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் பற்சிகிச்சை சுகாதாரப் பொறுப்பதிகாரி வைத்தியர் எழிலரசி தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட சுகாதார நடவடிக்கைகளிலும் பார்க்க கூடிய முக்கியத்துவமளிக்கப்படவுள்ளது. மேலும் முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே சுகாதாரப் பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் கூடியளவு சுகாதாரத்தை அவர்கள் எதிர்காலத்திலும் பின்பற்றுவார்களென்ற அடிப்படையில் இந்நடவடிக்கையை சுகாதார அமைச்சு மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(வவுனியா)

கல்வியமைச்சின் ஏற்பாட்டில் மாகாண மட்டத்தில் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற எயிட்ஸ் விழிப்புணர்வுக் செயற்றிட்ட உங்களுக்குத் தெரியுமா வினாடி வினாப் போட்டியில் வடமாகாண ரீதியில் வவுனியா தெற்கு கல்வி வலயம் வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை, அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே சுகாதார மேம்பாட்டு நிகழ்சித் திட்டத்தின் கீழ் உங்களுக்குத் தெரியுமா என்னும் வினாடி வினாப் போட்டியும் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு சரசவி திரைப்படக் கலையக கூடத்தில் நடைபெறவுள்ளது.

# பொலிகண்டி-பருத்தித்துறை கடற்கரை வீதி மழை காலத்தின் பின் புனரமைக்கப்படும்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

(வடமராட்சி)

மழை காலம் ஆரம்பமாகியுள்ளதால் பொலிகண்டி பருத்தித்துறையூடான கரையோர வீதிப் புனரமைப்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதே தவிர முற்றுமுழுதாக நிறுத்தப்படவில்லை. எனினும் மழை காலம் முடிந்த பின்னர் புனரமைப்புப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவிதார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான தொண்டைமானாறு பருத்தித்துறை முனை ஊடான கரையோர வீதிகள் புனரமைத்து செப்பனிடுவதாகக் கூறி பொலிகண்டியுடன் நிறுத்தியுள்ள நிலையில் பொலிகண்டி தொடக்கம் பருத்தித்துறை முனை வரையான கரையோர வீதி குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் மழை காலத்தில் பல சிரமங்களுக்கு உள்ளாவதுடன் விபத்துக்களும் ஏற்படும் அபாயம் உள்ளாதென கரையோர பகுதி வாழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்படி தகவலை அவ் அதிகாரி தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், வடமராட்சி வடக்கு தொண்டைமானாறு பாலம் தொடக்கம் பருத்தித்துறை முனை வரையான கரையோர வீதிகள் SD&CC என்ற நிறுவனத்தினூடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப் படையில் தொண்டைமானாறு பாலம் தொடக்கம் பொலிகண்டி வரையான கரையோர வீதிகள் செப்பனிடப்பட்டுள்ள நிலையில் பொலிகண்டி தொடக்கம் பருத்தித்துறை முனை வரையான கரையோர வீதிகள் மழை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் மழைக் காலம் முடிவுற்றதும் எமது வேலைகள் மீள ஆரம்பமாகும்.

மேற்படி வீதிகளில் உள்ள மதகுகள் மற்றும் பாலங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவையும் திருத்தப்படவுள்ளதுடன் வீதியோரத்தில் உள்ள நீர் நிலைகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும் வடமராட்சி வடக்கு கரையோர வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் 2012ஆம் ஆண்டின் இறுதியில் வீதிகளை அகலிப்புச் செய்து காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது எனவும் மேலும் தெரிவித்தார். (116)



மயிலங்காடு ஸ்ரீமுருகன் முன்பள்ளி சிறார்களின் ஆண்டு விழாவில் பனை அபிவிருத்திச்சபைத்தலைவரும, ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத தலைவருமான பசுபதி சீவரத்தினம் உரையாற்றுவதையும், வலி தெற்கு பிரதேச சபையின் ஈ.பி.டி.பி உறுப்பினர் கி. இராசசேகரம், முன்பள்ளி ஆசிரியை மற்றும் பெற்றோர்கள் மேடையில் அமர்த்திருப் பதையும் காணலாம்.

# வடக்கில் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு இந்திய அரசின் உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படும்

## இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர்

( யாழ்ப்பாணம் )

வடமாகணத்தில் பெற் றோர்களை இழந்த சிறுவர்க ளுக்கு உதவிகள் தேவைப்பட் டால் அவற்றைப் பெற்றுக் கொடுக்க இந்திய அரசிடம் உதவிகோரு வதாக இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் மகாலிங்கம் தெரிவித்தார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச் சின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் யாழ் வீரசிங்கம் மண்ட பத்தில் இடம்பெற்ற "உறவுப் பாலம்" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

இந்திய அரசாங்கம் வட மாகாணத்திலுள்ள மக்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கி வருகின்றது. இருந்த போதிலும் இலங்கையில் ஏற் பட்ட யுத்தத்தின் பின்னர் பெற் றோர்களை இழந்த சிறுவர்க ளுக்கு வேண்டிய உதவித் திட் டங்களை வழங்குவதற்கு இந் திய அரசாங்கத்திடம் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற் கொள்வதாக உறுதியளித்தார்.

மேலும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு எடுக்கும் எந்தவொரு திட்டத்திற்கு இந்திய அரசாங் கம் எப்போதும் உதவி செய்



யும்.எமது மக்களிடையே மொழிப பிரச்சினைகள் ஏற்படாது ஒற்று மையுடனும், இனமத வேறு பாடுஇன்றி செயற்படுவதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டின் அமைச்சர் வாசுதேவநாணயக்கார எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற் றியளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# வடக்கு பள்ளிவாசல்கள் தொடர்பாக திணைக்கள அதிகாரிகள் ஆராய்வு

( யாழ்ப்பாணம் )

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களமும், வக்பு சபை உறுப்பினர்களும் யாழ் மாவட்டத்திற்கு அண்மையில் விஜயம் செய்துள் ளனர்.

கடந்த மூன்று தினங்களாக வவுனியா, கிளி நொச்சி, நாச்சிக்குடா, கொடிகாமம், சாவகச் சேரி, பருத்தித்துறை, நயினாதீவு, மண்கும்பான், யாழ் முஸ்லிம் வட்டாரம், பெரியகடை, ஜும்மா பள்ளி வாசல், ஆகிய வணக்கஸ்தலங்களுக்கு விஜ யம் மேற்கொண்டார்கள்.

இங்குள்ள பள்ளிவாசல்களின் குறைபாடுகள், தேவவைகள், பிரச்சினைகள், சம்பந்தமாக நீண்ட நேரம் பரிபாலன சபையுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டன.

பெரியகடை ஜும்மா பள்ளிவாசலுக்கான புதிய நம்பிக்கையாளர் சபையும் தெரிவுசெய்யப்பட்டன. முஸ்லிம் கல்லூரி வீதியிலுள்ள சின்னப்பள்ளி வாசலுக்கான நம்பிக்கையாளர் நியமனப் பத்திர மும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

புதிய மொஹிதீன் பள்ளியில் யாழிலுள்ள அனைத்துப் பள்ளிவாசலின் நிர்வாகிகளுக்கான பொதுக்கூட்டம் நடைபெற்றன. இதில் வக்பு சபை யின் தலைவர் சட்டத்தரணி அலி. சப்ரி உரை யாற்றினார்.

இந் நிகழ்வில் திணைக்களத்தின் பிரதிப் பணிப பாளர் எம்.ரபீக், மாநகரசபை உறுப்பினர் டி.எஸ். எம்.சுபியான், மற்றும் வக்பு சபை உறுப்பினர் களும் சமூகமளித்தனர்.

இவர்களுக்கு உதவியாக மாநகரசபை உறுப் பினர் சட்டத்தரணி எம்.ஆர்.ரமீஸ், பெரிய முஹிதீன் பள்ளித் தலைவர் எம்.எல்.லாபிர் செயற்பட்டனர். (105)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் வவுனியாவில் பல்வேறு நிகழ்வுகள்

(வவுனியா)

வவுனியாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காலை 8.30மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்ச்சியில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி மூவின மக்களை பிரதிநிதிப்படுத்தும் வகையில் மூவின மதகுருமார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரி கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கரப்பந் தாட்ட விளையாட்டு நிகழ்வொன்றும் நடைபெற்றதுடன் மாணவ மாணவி களுக்கு புலமைப் பரிசில்களும் வழங் கியதுடன் பேரணி ஒன்றும் இடம் பெற் றது

இந்த வாகனப்பேரணி வவுனியா நகரசபை மைதானத்தில் இருந்து புறப் பட்டு கண்டிவீதியூடாகச் சென்று பஸார் வீதிவழியாக மன்னார் வீதியைச் சென்ற டைந்து நிறைவு பெற்றது.

இதில் 50இற்கு மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் துவிச்சக்கரவண்டிகள் உடன் பொதுமக்களும் வவுனியா மக்கள் வங்கி ஊழியர்களும் கலந்து கொண்ட னர்

மேலும் காலை 11.30 மணியில் இருந்து வவுனியா புளியங்குளம் பகுதி யில் மருத்துவ முகாம் ஒன்றும் இடம் பெற்றது. (125)

# - மாணவர்கள், பயனாளிகளுக்கு- திவிநெகும திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் விநியோகம்

(வடமராட்சி )

திவி நெகும திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண தென்னை பயிரச் செய்கை சபையினரால் 4வருடத்தில் காய்க்கும் தென்னங் கன்றுகள் பாடசாலை மாண வர் களுக்கும் பிரதேசசெயலக பயனாளி களுக்கும் வழங் கப்பட்டு வருகின் றது. அதன் அடிப்படையில்

நெடுங்கேணிப் பிரதேச செயலகத் துக்கு 3 ஆயிரம் தென்னங் கன்று களும், செட்டிகுள பிரதேச செயல கத்துக்கு 3ஆயிரம் தென்னங்கன்று களும், அத்துடன் வவுனியா சிங்கள பிர தேச செயலகத்துக்கு 4ஆயிரம் தென் னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரம் கன்றுகள் வழங்கப்படவுள் ளது.

அதே நேரம் வவுனியா தமிழ்ப் பிர தேச செயலர் பிரிவுகளுக்கு 4 ஆயி ரம் தென்னங்கன்றுகளும் வழங் கப் பட்டு வருகின்றது இத்திட்டம் ஒரு பய னாளிக்கு இரண்டு தென்னம் கன்றுகள் வீதம் வழங்கப்படுகின்றது என வவுனியா மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தி யோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தரம் 06இல் கற்கும் மாண வர்களின் கல்வி வளர்ச்சியை ஊக குவிக்கும் முகமாக தென்னங் கன்று வளர்க்கும் திட்டம் தற் போது வவுனியா மாவட்டத்தில் ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங் கப்பட்டுள்ள நிலையில் இன்னும் 3 ஆயிரம் தென்னங் கன்றுகள் வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள்O/L வரை கற்று வரும் பட்சத்தில் வழங்கப்பட்ட தென்னங்கன்றை சரியான முறை யில் பராமரித்துவரும் மாணவர் களுக்கு சிறந்த புலமைப் பரிசில் திட்டம் தென்னை அபிவிருத்திச் சபையால் வழங்கப்படவுள்ளது. அந்த மாணவர்களில் ஒருவருக்கு இரு தென்னங்கன்று என்ற அடிப் படையில் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (116)

# நுளம்பு பெருகும் வகையில் செயற்பட்ட வீட்டு உரிமையாளர் மீது வழக்கு

கல்வியங்காடு இராச வீதியில் உள்ள வீட்டு வளவு ஒன்றில் நுளம்புகள் பெருகும் வகை யில் கழிவுப் பொருட்களை வைத்திருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு அவ் வீட்டு உரிமை யாளர் மீது கோப்பாய் பொலிஸாரினால் யாழ். நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. கோப்பாய் சுகாதாரப் பகுதியின ரும் பொலிஸாரும் இணைந்து இப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கழிவுப் பொருட்கள் அதிகளவில் இவ் வீட்டு வளவுக்குள் காணப்பட்டன.

தொடர்ந்தும் கோப்பாய் சுகாதாரப் பரிவில் நுளம்புப் பெருக்கத்தை தடை செய்யும் நோக் கோடு பல இடங்களிலும் சோதனை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என கோப்பாய் சுகாதாரப் பரிசோதகர் பி. சயந்தன் தெரிவித் துள்ளார். (137)



யாழ் பல்கலைக்கழகத்தில் 25 வருடங்களாக பராமரிப்புப் பகுதி எந்திர வியலாளராக கடமையாற்றிய சின்னத்துரை தயாபரனின் சேவை நலன்பாராட்டு விழாவும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றபோது உத்தியோகத்தர் ஒருவர் விழா நாய கனுக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதைக் காணலாம். (54)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(20.12.2011-செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
மார்கழி -04 ஆம் நாள்.
இராகுகாலம் 3.24-4.54, சுபநேரம் 10.54-12.24வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப . 3.27 வரை
திதி: தசமி மு.ப. 10.30 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:-பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தூரத்திலிருந்து துக்க செய்தி, திடீர்ப் பயணம், தேகம் சுகம்.

ரிஷபம:-குடும்பத்தில் கவலை,பணம் வரும்அதிகாரப் போட்டி, வீண் அலைச் சல், தேகம் சுகம்

மிதுனம் :-பணக்கஷ்டம், காரியத்தடை, தொழில் மந்தம், குடும்பத்தில் கவலை, தேகம் பலவீனம்.

கடகம்:- நினைத்ததைச் சாதித்தல், பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், காரிய வெற்றி திடீர் அதிஷ்டம்

சிம்மம்:- பணம்வரும், குடும்பத்தில் கவலை, திடீர்ப் பயணம், தொழில் மந்தம், தேகம் சுகம்.

கனனி :- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, அயலார், தொல்லை, தேகம் சுகம்.

துலாம் :-பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, தூரத்திலிருந்து நற்செய்தி, நண்பர் வருகை, தேகம் சுகம்

விருச்சிகம்:-குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், திடீர்ப் பயணம், நண்பர் வருகை, தேகம் பலவீனம்.

தனுசு:- பணம்வரும், குடும்பத்தில் கவலை, அதிகாரப் போட்டி, வீண் அலைச்சல், தேகம் சுகம்.

மகரம:- அயல் வீடு பகை, பணக் கஷ் டம், சுற்றத்தார், ஆதரவு, நண்பர் வருகை.

கும்பம் :- பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, திடீர் அதிஷ்டம், பக்கத்து வீடு கரைச்சல், தேகம் சுகம்.

மீனம் :- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், சுற்றத்தார் ஆதரவு, நண்பர் வரவு, தேகம் சுகம்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**21.12.2011 - 16.12.2014** ஜோதிடமாமணி முருகு பாலமுருகன்



## விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம்
அனுஷம் கேட்டை

பிடிவாதக் குணமும், கேட்பவர்களை தன்வசமாக்கிக் கொள்ளக்கூடிய பேச்சாற்றலும் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே! இது நாள் வரை லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து பல நற்பலன்களை வாரி வழங்கிய சனி பகவான் வரும் 21-12-2011 முதல் விரைய ஸ்தானமான 12ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய விருப்பதால் உங்களுக்கு ஏழரைச் சனியில் முதல் பாகமான விரய சனி தொடங்கு கிறது. இது அவ்வளவு சாதகமான அமைப்பு என்று கூறமுடியாது. இதனால், உடல் நிலையில் சோர்வு, எதிலும் சுறுசுறுப்பாக செயற்பட இயலாத நிலை, உற்றார், உறவினரிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடும். என்னதான் பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும் வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகி விடும். குடும்பத்திலும் நிம்மதியற்ற நிலை ஏற்படும். தொழில் வியாபாரம் செய்பவர்கள் எதிலும் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்துச் செயற்படுவது நல்லது. உத்தியோகத் தர்களுக்கும் கௌரவம் கிடைக்கப்பெற்றாலும் பணிச்சுமை காரணமாக அதிக நேரம் உழைக்க வேண்டியிருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உங்களுக்கு ஏழரைச் சனியில் விரய சனி நடைபெறும். இக்காலங்களில் 17-05-2012 வரை தனக்காரகன் குருபகவானும் குண ரோக ஸ்தானமான 6ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் பண வரவுகளில் நெருக்கடிகள், தேவையற்ற வம்பு வழக்குகள், மறைமுக எதிர்ப்புகளைச் சந்திக்கக் கூடிய நிலை உண்டாகும். 17-05-2012 முதல் 28-05-2013 வரை சம சப்தம ஸ்தானமான 7ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது அற்புதமான அமைப்பாகும். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி திருமண சுப காரியங்கள் கைகூடக் கூடிய நிலை பூமி மனை வாங்கும் யோகம், கணவன் மனைவியரிடையே ஒற்றுமை உண்டாகும். 28-05-2013 முதல் 13-06-2014 வரை அஷ்ரம ஸ்தானமான 8ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது சாதக மற்ற அமைப்பு என்பதால் பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. 13-06-2014 முதல் 05-07-2015 வரை பாக்கிய ஸ்தானமான 9ஆம் வீட்டில் குரு சஞ்சரிக்க இருப்பது எல்லா வகையிலும் நற்பலனை ஏற்படுத்தும் அமைப்பாகும். சர்ப கிரகங்களான ராகு, கேது 02-12-2012 வரை ஜென்ம ராசியில் ராகுவும் 7இல் கேதுவுமாக சஞ்சாரம் செய்யவிருப்பதால் உடல் ஆரோக்கியத்திற்கு சற்று கவனம் எடுப்பதும் நெருங்கியவர்களை அனுசரித்து பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நல்லது.

### தேக ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியத்தில் எதிர்பாராத வகையில் பாதிப்புக்கள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகும். நெருங்கியவர்களாலும் மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். குடும்பத்தில் மனைவி பிள்ளைகளால் சிறுசிறு மருத்துவச் செலவுகளையும் செய்வீர்கள். தேவையற்ற பயணங்களாலும் அலைச்சல் டென்சன் அதிகரித்து உடல் நிலை சோர்வடையும்.

### குடும்ப பொருளாதார நிலை

குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்களால் வீண் பிரச்சினைகள் ஏற்படும். மன உளைச்சல் அதிகரிப்பதால் தூக்கமின்மை, சுக வாழ்வில் பாதிப்பு, நிம்மதிக் குறைவு ஏற்படும். இதனால் முடிந்தவரை மற்றவர்களை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. பொருளாதார நிலையானது சுமாராக இருந்தாலும் செலவுகள் கட்டுக்குள் இருக்கும்படி பார்த்துக் கொள்வது நல்லது. உற்றார், உறவினர்களும் அடிக்கடி தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள். எதிர்பாராத பய ணங்களாலும் அலைச்சல் உண்டாகும். குல தெய்வ வழிபாடுகள் மேற்கொள் வதன் மூலம் குடும்பத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சற்று குறைத்துக் கொள்ள முடியும்.

### உத்தியோகத்தர்களுக்கு

உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல்கள் அதிகரிப்பதுடன் குடுபத்தை விட்டுப் பிரியக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஊதிய உயர்வுகள் கிடைக்கப்பெற்றாலும், புதிய இடம், புதிய நட்புகள் என எல்லாவற்றி லும் இடையூறுகள் ஏற்படும். உயரதிகாரிகளிடம் அனுசரித்துச் செல்ல முடியாமல் போகும். என்றாலும் பேச்சில் சற்று நிதானத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் எல்லாவற்றிலும் முன்னேற்றத்தை அடைவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் வியாபாரம் செய்பவர்களின் நிலை ஏற்ற இறக்கத்துடனேயே அமையும். எடுக்கும் எந்தவொரு புதிய முயற்சிகளிலும் எதிர் நீச்சல் போட்டே முன்னேற வேண்டியிருக்கும். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் சற்று தாமதப்படும். கூட்டாளிகள் உதவினாலும் தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமல் போகும். எந்தவொரு காரியத்திலும் ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்துச் செயற்படுவது நல்லது. வெளியூர் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப் புக்கள் கிடைக்கப்பெற்றாலும் அதன் மூலம் அலைச்சலும் அதிகமாக இருக்கும்.

### அரசியல் வாதிகளுக்கு

அரசியலில் உள்ளவர்களுக்குத் தேவையற்ற பயணங்களும், அதனால் அலைச்சல்களும் உண்டாகும். பொருளாதார நிலை எதிர்பார்த்த படி இல்லாத சூழ்நிலை நிலவினாலும் கட்சிக்காக நிறையச் செலவுகள் செய்ய வேண்டி யிருக்கும். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவது நல்லது. பத்திரிகைச் செய்திகளில் உங்கள் பெயருக்கு களங்கம் ஏற்படும்.

### விவசாயிகளுக்கு

விவசாயிகளுக்கு பயிர்களில் புழு பூச்சிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். இதனால் நிறைய வீண் செலவுகளும் ஏற்படும். எதிர்பார்த்தபடி விளைச்சல் இல்லாததால் பட்ட பாட்டிற்கு பலனின்றிப் போகும். பூ, காய், கனி போன்றவற்றால் ஓரளவுக்கு விளைச்சல் இலாபமளிக்கும். கால் நடைகளாலும் இலாபம் ஈட்டும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாதிருப்பது நல்லது.

### பெண்களுக்கு

உடல் ஆரோக்கியத்தில் மந்த நிலை சோர்வு, தூக்கமின்மை, கனவுத் தொல்லை போன்றவை ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் சற்று பாடுபட வேண்டியிருந்தாலும் உற்றார், உறவினர்களை அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்திலும் அனுகூலப் பலனை அடைய முடியும். பணவரவுகள் தேவைக்கேற்றபடியிருந்தாலும் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருப்பது நல்லது. கணவன், மனைவியரிடையே ஒற்றுமை குறையக்கூடிய காலம் என்பதால் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் உத்தமம்.

### மாணவர்களுக்கு

கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியில் சற்று ஈடுபாட்டுடன் செயற்பட்டால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெறமுடியும். மனதை தேவையற்ற விஷயங்களில் அலையவிடாமல் பார்த்துக் கொண்டால் தேவையற்ற சிந்தனைகள் விலகும். உடன் பழகும் நண்பர்களிடம் கவனம் தேவை. பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவு உங்களுக்கு எப்போதும் உண்டு.

# சமய விழுமியங்கள் பின்பற்றப்பட்டால் எமது கலாசாரம் பாதுகாக்கப்படும்

## ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம்

(யாழ் நிருபர்)

இந்து சமய மாணவர்கள் சமயச்சின்னங்களை வெளிக்காட்டுவதற்கு வெட்கப்படுகின்றார்கள் என இந்துசமய கலாசாரத் திணைக்கள ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் சைவபரிபாலனசபை மண்டபத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132ஆவது குருபூஜைத் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நற்சிந்தனைகள் பற்றி சொறபொழிவாற்றுவதற்கு, தேவாரங்கள் பாடுவதற்கு, திருநீறு அணிவதற்கு தயங்குகின்றார்கள் ஆனால் கிறிஸ்தவன் பைபிளிலும் முஸ்லீம் குர் ஆனிலும் ஒரு வசனம் தெரியாவிட்டால் அதற்காக வெட்கப்படுகின்றார்கள். ஆனால் இந்துமதத்தவர்கள் தேவாரம் தெரியாது எனக்கூறுவது பெருமை என எண்ணுகின்றார்கள்.

இவற்றிற்கெல்லாம் காரணம் பெற்றோர்களே. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மரபு ரீதியாக வளர்ப்பதில் அக்கறை காட்டுவதில்லை. அவர்கள் மேலைத தேய கலாசாரத்தை பின்பற்றுகின்ற நிலை காணப்படுகின்றது.

இந்துமக்கள் எமது சமய விழுமியங்களை ஒழுங்காகப் பின்பற்றி இருந்தால் வயோதிப இல்லங்கள் தோன்றுகின்ற நிலை ஏற்பட்டிருக்காது.

சைவபரிபாலன சபையானது ஒரு ஞான ஒளியாக திகழ வேணடும். இதன் ஊடாக மங்கிப் போகும் சமூக விழுமியங்களையும் ஒழுக்கங்களையும் நெறிப் படுத்தவேண்டும்.

எனவே நாவலர் காட்டிய சைவ மரபையும் பாரம்பரியத்தையும் நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நாவலர் பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களின் சொற்பொழிவு இடம்பெற்றது. அகில இலங்கை சைவநெறித் தேர்வில் முதன்மைப் பேறு பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார். (10)

# கிழக்கில் 5 வீதிகள் புனரமைப்பு

ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஜெயிக்கா திட்டத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவில் 37.1 மில்லியன் ரூபா செலவில் ஐந்து வீதிகளுக்கான வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஓட்டமாவடி எஸ்.எம்.ரீ.ஹாஜியார் வீதி 9.6 மில்லியன் ரூபா செலவிலும் ஓட்டமாவடி மடுவத்து வீதி 7 மில்லியன் ரூபா செலவிலும் மீராவோடை நூரானியா வீதி 8 மில்லியன் ரூபா செலவிலும் மீராவோடை எம்.பி.சி.எஸ். கிளை வீதி 6.3 மில்லியன் ரூபா செலவிலும் மீராவோடை சாவன்னா வீதி 6.2 மில்லியன் ரூபா செலவிலும் கொங்ரீட் வீதிகளாக புனர்நிர்மாணம் செய்யப் படவுள்ளன.


# பண்டிகை காலத்தில் பற்றாக்குறையின்றி உணவுப் பொருட்களை விநியோகிக்க ஏற்பாடு

(கொழும்பு)

பண்டிகைக்காலத்தில் பற்றாக்குறையின்றி அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்காக, அரசாங்கம் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

அரிசிக்கான பற்றாக்குறையைத் தோற்றுவித்து, விலையினை அதிகரிக்க ஒருசில வர்த்தகர்கள் முயற்சிப்பதாக, தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பண்டிகைக் காலங்களில் இதற்கு முன்னரும், இவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இருப்பினும், எதுவித பற்றாக்குறைகளுமின்றி, அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க, அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தேவைப்படும் பட்சத்தில் 5 ஆயிரம் மெட்ரிக் டொன் நெல்லினை அரிசியாக மாற்றியமைக்க, நெற் சந்தைப்படுத்தும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மெடரிக் டொன் நெல், களஞ்சிய சாலையில் இருப்பதாக, நெற் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் கே.பி. ஜயசிங்க தெரிவிக்கிறார். இதனால் பற்றாக்குறையின்றி அரிசியை விநியோகிக்க, நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு முடியுமெனவும், அவர் தெரிவித்துள்ளார். இதற்கு மேலதிகமாக, சதொச மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் போதியளவு அரிசி, இருப்பில் உள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.



**மன்னார் மருதமடு மாதா ஆலயச் சுற்றாடலுக்கான புதிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கான பெயர்ப்பலகையை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்வதைக் காணலாம். (21)**

# 2 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் வடக்கில் காலபோக நெற் செய்கை



(கொழும்பு)

வடக்கில் இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள, திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட மாவடங்களில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்த மக்கள், மீள்குடியேறியுள்ள பிரதேசங்களிலும், இம்முறை நெற்செய்கையை ஆரம்பிக்க, திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைவிடப்பட்ட நிலையிலிருந்த பல ஏக்கர் வயல் காணிகளில், நெற்செய்கை மேற்கொள்ளப்படும். இதற்கென, அரசாங்கம் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்துள்ளது. கடந்த போகத்தில் மழை காரணமாக, விளை நிலங்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கென, விவசாய அமைச்சினால், விதைநெல் வழங்கப்பட்டுள்ளது.

சகல விவசாயிகளுக்கும், உரமானியமும் வழங்கப்படுகிறது. இம்முறை அதி உயரிய விளைச்சலை பெறுவதே, நோக்கமென, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் கழகத் தலைவர்கள், செயலாளர் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (85)

## விளையாட்டுக்கழகம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் ஜே/89 கிராம அலுவலர் பிரிவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர்ப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ. இரவீந்திரதாஸன், அகதிகள் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் எம். சாம்பவி, சி. குகதர்சினி, நெஸ்லோ முகாமையாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுக்கழகத் தலைவராக ஜெ. ஜெயவாசன், செயலாளராக ஆ. யோ. அன்ரன் யோவாநந்தன், பொருளாளராக இரத்தினசிங்கம் கோமன் அசோக் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# கழக மட்ட உலகக் கிண்ணம் பார்சிலோனா அணி சம்பியன்



(யோகோகமா)

கழக மட்டத்திலான உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில், பார்சிலோனா அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ஜப்பானில், எட்டாவது சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக மட்டத்திலான உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடர் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் பார்சிலோனா, சான்டோஸ் அணிகள் மோதின.

தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு, 17ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி முதல் கோல் அடித்து நம்பிக்கை அளித்தார். தொடர்ந்து அசத்திய பார்சிலோனா அணியின் சேவி (24ஆவது நிமிடம்), பேப்ரிகாஸ் (45ஆவது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். இதற்கு சான்டோஸ் அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 3-0 என முன்னிலை வகித்தது.


இரண்டாவது பாதியிலும், பார்சிலோனா வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, சான்டோஸ் அணியின் கோல் அடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில், பார்சிலோனா நட்சத்திர வீரர் மெஸ்ஸி, மீண்டும் ஒரு கோல் அடித்தார்.

ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக (2009, 2011) சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இத்தொடரின் சிறந்த வீரருக்கான கோல்டன் பால் விருதை, பார்சிலோனா அணியின் மெஸ்ஸி தட்டிச் சென்றார்.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் அல்சாத், காஷிவா ரேசால் அணிகள் மோதின. ஆட்டநேரம் மற்றும் கூடுதல் நேரத்தில் இரு அணிகளும் ஒரு கோல் கூட அடிக்கவில்லை. இதனால் போட்டியின் முடிவு, தண்ட உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் அபாரமாக ஆடிய அல்சாத் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது இடம் பிடித்தது.

## சாய்னா தோல்வி





(லிஜோ)

உலக சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் தொடரில் இந்தியாவின் சாய்னா நெஹ்வால் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார்.

உலக சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் தொடர் சீனாவின் லிஜோ நகரில் நடந்தது. இதில் விளையாடிய இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால் அற்புதமாக ஆடி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

உலக சூப்பர் சீரிசில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையுடன் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் களமிறங்கிய சாய்னா, உலகின் முதல் நிலை வீராங்கனையான சீனாவின் வாங் யிஹனை எதிர்த்து விளையாடினார். ஆட்டத்தின் தொடக்கத்தில் அனல் பறந்தது. முதல் செட்டை சாய்னா 21-18 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற அரங்கத்தில் அமர்ந்திருந்த உள்ளூர் ரசிகர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர்.

அடுத்த 2 செட்டிலும் வாங் யிஹனின் கை ஓங்கியது. சாய்னாவும் ஈடு கொடுத்து விளையாடிய போதிலும் அவரால் வெற்றி பெற முடியவில்லை. இறுதியில், சாய்னா 21-18, 13-21, 13-21 என்ற செட்களில் போராடித் தோல்வி அடைந்தார். இந்தாண்டில் வாங் யிஹன் வெல்லும் 6ஆவது சம்பியன் பட்டம் இது. சாய்னா 3ஆவது முறையாக 2ஆம் இடத்தைப் பிடித்துள்ளார்.

# கோப்பாய் செயலக அணியை வீழ்த்தியது தெல்லிப்பளை

(யாழ்ப்பாணம்)





யாழ். சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்திய நட்புக்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்துக் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுள்ளது.

கல்வியங்காடு ஸ்ரீஞானபாஸ்கரோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 14.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 77ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 78 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 13.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. (93)

# சப்பல்! பாட்ஷா பலிக்காது

(புதுடில்லி)



கிரேக் சப்பல் யோசனையால் அவுஸ்ரேலிய அணிக்கு எந்தப் பிரயோசனமும் இருக்காது என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.


சச்சினைப் பார்த்து அவுஸ்ரேலியப் பந்துவீச்சாளர்கள்தான் பயப்படுவார்கள். அவுஸ்ரேலியாவைப் பார்த்து சச்சின் பயப்படமாட்டார். அவுஸ்ரேலியாவில் அவர் எப்போதுமே சிறப்பாக விளையாடக் கூடியவர். அங்கு 31 டெஸ்டில் விளையாடி 11 சதம் அடித்துள்ளார். சராசரியாக 60.9 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட சச்சினை வீழ்த்த சப்பல் யோசனை கூறுகிறாராம்.

சப்பல் யோசனையால் அந்த அணிக்கு ஒரு பிரயோசனம் கூட இருக்காது என்பதுதான் உண்மை. 2008ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணியின் துணை அலுவலராக சப்பல் இருந்துள்ளார். அப்போது இந்திய அணி 2-0 என தொடரை வென்றிருக்கிறது. அதே போல இம்முறையும் சப்பல் யோசனைக்குப் பிறகும் அவுஸ்ரேலியாவை இந்தியா வெல்லும். திறமை, அனுபவம் மற்றும் இளம் வீரர்களைக் கொண்ட இந்திய அணி அவுஸ்ரேலியா மண்ணில் சாதிக்கும் என்பதில் எவ்வித கேள்வியும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.



உலக சுப்பர் சீரிஸ் பட்மின்ரன் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் சக வீரர் லாங் செனை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்ற சீனாவின் லின்டான் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

# தௌபீக் உமர் சதம் பாகிஸ்தான் 292/3



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை மூன்று விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சிறப்பான முறையில் ஆடிய தௌபீக் உமர் (130) சதம் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் அசார் அலி 57 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது யுனிஸ்கான் 48, அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 26 ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர். பந்து வீச்சில் நஸ்முல் ஹசன் இரண்டு, ஷகிப் அல் ஹசன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். வெளிச்சமின்மை காரணமாக நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. பங்களாதேஷ் முதல் இனிங்ஸ் 338.

## தொடரை வெல்வது நிச்சயம்

### ராகுல் ராவிட்

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் சொந்த மண்ணின் சாதனைகள், புள்ளி விவரங்கள் எல்லாம் தேவையில்லை. என்னைப் பொறுத்த வரையில், அவுஸ்ரேலியாவில் டெஸ்ட் தொடரை நாங்கள் நிச்சயம் கைப்பற்றுவோம் 'என ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார். அணியின் வெற்றியில் என்னுடைய பங்களிப்பும் இருக்க வேண்டும். அவுஸ்ரேலிய மண்ணில் இந்திய அணி இதுவரை டெஸ்ட் தொடரை வெல்லவில்லை என்ற வரலாற்றை இம்முறை மாற்றி எழுதுவோம்.' சச்சின், டோனி, லட்ஸ்மன் என அணி முழுப் பலத்துடன் இருப்பதால் நிச்சயம் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## சவாலான தொடர்

### பொண்டிங்

(சிட்னி)

இந்தியாவுக்கு எதிரான தொடரில் நானும், ஹசியும் சிறப்பாக ஆட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இதனால் எங்களுக்கு இந்தத் தொடர் சவாலாக இருக்கும் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். கடந்த சில காலமாக எனது ஆட்டத்திறன் சிறப்பாக இருக்க வில்லை என்பது உண்மையே. ஆனால், இந்திய அணிக் கெதிரான தொடரில் எனது ஆட்டம் அணியின் வெற்றிக்குத் துணைபுரியும் என நம்புகின்றேன். இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரை சிறப்பாக எதிர்கொள்ள நாம் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பது நேரத்தை விரயமாக்கும் செயலாகும்

## ஜே.வி.பி.விமர்சனம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது நேரம் மற்றும் பணத்தை விரயமாக்கும் செயற்பாடாகும் என ஜே.வி.பி. விமர்சித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, யுத்தம் முடிவுற்ற பின்னரும் தொடரும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதி எதிர்நோக்கும் நெருக்கடிகளிலிருந்து அவரை மீட்பதற்காகவே நியமிக்கப்பட்டது எனவும் ஜே.வி.பி.யின் அரசியல் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் விமர்சிக்கப்பட்டுள்ளது.

பிரிவினைவாத யுத்தத்திற்கு காரணமான சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படைக் காரணங்களை ஆராய்வதற்காக இந்த ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. வெளிநாட்டுச் சக்திகளால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் கொடுக்கப்பட்ட அழுத்தங்களிலிருந்து அரசாங்கத்தை விடுவிப்பதற்கே இது நியமிக்கப்பட்டது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகாக அல்லாமல், 30 வருடகால பிரிவினைவாத யுத்தத்தில் 21.02.2002 முதல் 19.05.2009 வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற சில சம்பவங்களைக் கையாள்வதற்கே இந்த ஆணைக்கு நியமிக்கப்பட்டது. ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க விரும்பிய பலருக்கு போதிய நேரம் வழங்கப்படவில்லை.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கு, அவர்களின் காணிகள் மற்றும் ஏனைய உடைமைகளை கொடுப்பதற்கு, காணாமற்போனோரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிவில் நிர்வாகத்தையும், ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவொன்றின் சிபாரிசுகள் அவசியமில்லை.

நிலவுகின்ற தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அல்லது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஆணைக்குழு அல்ல இது. அடிப்படை பிரச்சினையை இனம் காண்பதற்குக் கூட இந்த ஆணைக்குழு தவறியுள்ளது எனவும் ஜே.வி.பி. கூறியுள்ளது.

# வெளிநாட்டுப் பணிப்பெண்களில் மூவரில் ஒருவர் துஷ்பிரயோகம்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வீட்டுப் பணிபெண்களாக கடமையாற்றும் இலங்கையர்களில் சராசரியாக மூவரில் ஒருவர் தாக்கப்படுதல், தீயினால் சுடப்படுதல் போன்ற உடல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதாக ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது.

கத்தோலிக்க ஆயர்கள் அமைப்பின் சமூகசேவைப் பிரிவான கரித்தாஸ் சிறிலங்கா செடக் நிறுவனத்தினால் சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இந்த ஆய்வுநூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இப்பணிப்பெண்களில் 31 சதவீதமானோர் உடலில் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியுள்ளனர். 30 சதவீதமானோர் சம்பளம் வழங்கப்படாமை குறித்து முறைப்பாடு செய்துள்ளனர். 44 சதவீதமானோர் உணவு வழங்கப்படாமலிருந்ததாக முறைப்பாடு செய்துள்ளனர்

25 சதவீதமானோர் தமக்கு உறங்குவதற்கு முறையான இடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்ட நிபுணரான சியாமளி ரணராஜா மேற்படி கரித்தாஸ் நிகழ்ச்சியில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு போக்குகள் குறித்து விளக்கமளிக்கையில், வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் 90 சதவீதமானோர் அதற்கு முன் ஒருபோதும் தொழில் எதுவும் செய்யாதவர்கள் ஆகும்.

சொந்த நாட்டில் பணிபுரியாத ஒரு பெண்ணுக்கு வெளிநாடு சென்று பணிபுரிவது மிகக் கடினமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் டிலான் பெரேரா உரையாற்றுகையில் வெளிநாடுகளுக்குத் தொழிலாளர்களாகச் செல்பவர்களுக்கு அந்தந்த நாடுகளுக்கு ஏற்ப பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறினார்.

# இலகு காலாட் படையின் புகைப்படக் கண்காட்சி



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் இலகு காலாட்படைப் பிரிவின் சின்னமான கந்துல (யானை) தொடர்பான 3 நாள் புகைப்படக் கண்காட்சியை கொழும்பு கலாபவனத்தில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

1961 முதல் இப்படைப்பிரிவின் சின்னத்தின் (கந்துல) பெயரில் உத்தியோகபூர்வ யானையொன்று தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை கந்துல அந்தஸ்தை வகித்த 6 யானைகள் உயிரிழந்துள்ளன. தற்போது உள்ளது 7 ஆவது கந்துல யானையாகும். இதுவரை கந்துல அந்தஸ்திலிருந்த 7 யானைகள் தொடர்பான புகைப்படங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

# ஜனவரி முதலாம் திகதி பொன்சேகா விடுதலையாகலாம்

(கொழும்பு)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மன்னிப்பின் கீழ், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனவரி முதலாம் திகதி சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவார் என அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்தன

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடத்திய கலந்துரையாடல்கள் வெற்றிகரமான பெறுபேற்றின் விளைவாகவே இம்மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹைகோர்ப் வழக்கில் 30 மாதச் சிறைத்தண்டனையும் வெளைக்கொடி வழக்கில் 3 வருட சிறைத்தண்டனையும் சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்தை கோரியிருந்தனர். அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் சரத் பொன்சேகாவுக்கு இம்மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. இம்மன்னிப்பின் பின்னர் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

# படையினரைக் காப்பாற்றவே ஆணைக்குழு அறிக்கை வெளியீடு

## குற்றஞ்சாட்டுகிறார் சுரேஷ் பிரேமச் சந்திரன்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கைப் படைத்தரப்பினருக்கு வெள்ளை அடிப்பதாக அமைந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கை குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் கடப்பாடு குறித்து இவ்வறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

படைத்தரப்பினர் குற்றமற்றவர்கள் என நிரூபிக்க முயலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது படைத்தரப்பினர் ஒரு சிலர் குற்றம் செய்திருக்கலாம் எனக் கூறியுள்ளது.

ஆனால், இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாகவோ, பொறுப்புக் கூறும் கடப்பாடு குறித்தோ இவ்வறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை

2002 ஆம் ஆண்டு இலங்கையின் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஏன் முறிவடைந்தது, போர் ஏன் மீண்டும் தொடங்கியது போன்ற விடயங்களை ஆராய்ந்து உண்மையைக் கண்டறிவதற்காகவே நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

ஆனால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை படைத்தரப்பினரைக் காப்பாற்றவே முற்பட்டுள்ளது. இன்றைய நிலையில் அரசாங்கத்திற்கு தேவையான ஓர் அறிக்கையை நல்லிணக்க ஆணைக்குழு தயாரித்துள்ளது

அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.



சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகளை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மாவட்ட அலுவலகங்கள் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்தன.

தேசத்தின் பொருளாதாரத்தை பாதுகாக்கும் நாட்டு வீரர்கள் சார்பாக நீங்களும் ஒன்று சேருங்கள் என்ற கருப்பொருளுடன் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கலாசாரப் பேரணி மற்றும் பாத யாத்திரைகள் என்பன இதன்போது இடம்பெற்றன. இதில் ஜனாதிபதி கலந்துகொண்டு வீரர்களை ஊக்குவிப்பதைக் காணலாம்.

# அரச ஊழியர் சம்பள உயர்வு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது

(கொழும்பு)


வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பத்து சதவீத சம்பள உயர்வு தொடர்பான சுற்று நிருபத்தை அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

அரச ஊழியர் ஒருவர் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெறும் அடிப்படை மாதாந்த சம்பளத்தில் பத்து சதவீதத்தினை 2012 ஜனவரி மாதம் முதல் விசேட படியாகப் பெறுவதுடன் இப்படியானது ஓய்வூதியக் கணிப்பீட்டிற்குள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு இப்படியானது ஜனவரி முதல் ஐந்து சதவீதமும் 2012 ஜூலை மாதம் முதல் மீதி ஐந்து சதவீதமும் வழங்கப்படும்.

இதேவேளை 2003 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு 2012 ஜனவரி மாதம் ஐநூறு ரூபாவும், 2012 ஜூலை மாதம் ஐநூறு ரூபாவும், விசேட படியாக வழங்கப்படுவதுடன் 2004 ஜனவரி முதலாம் திகதிக்கும் 2005 டிசம்பர் 31ஆம் திகதிக்குமிடையில் ஓய்வு பெற்றோருக்கு 2012 ஜனவரி மாதம் 250 ரூபாவும், ஜூலை மாதம் 250 ரூபாவும் விசேட படியாக வழங்கப்படுமென அமைச்சு வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டுக்காக சரியான தீர்மானங்களை எடுப்பதற்குத் தயங்கமாட்டேன்



(கொழும்பு)

நாட்டுக்காக சரியான நேரத்தில் தீர்மானங்களை எடுககத் தயங்கப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். லிட்றோ எரிவாயு நிறுவன பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் போன்றே அரச நிறுவனங்களை சுவீகரிக்கும் போதும் நிதானமான தீர்மானங்கள் எடுக்கப்படும். எனக்கு எதிராக எவ்வாறான வதந்திகள் பரப்பப்பட்டாலும் அவற்றை கண்டுகொள்ளப் போவதில்லை கடந்தகால அரசாங்கங்கள் வெளிநாடுகளுக்குத் தேவையான வகையில் ஆட்சி நடத்தி வந்தன. தற்போதைய அரசாங்கம் தனியார்மயப் படுத்தலைத் தடுத்து நிறுத்தி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆணைக்குழுவை விமர்சித்தவர்கள் எனது பதிலில் வாய் மூடுவார்கள்



(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழு தொடர்பில் உள்நோக்கத்தின் அடிப்படையில் விமர்சனங்களை முன்வைத்தவர்கள் வாய்மூடுமளவுக்குப் பதில் வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச மட்டத்தில் சிறந்த முறையில் பலமடையும் அளவுக்கு ஆணைக்குழுவின் அறிக்கை அமைந்துள்ளது.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையானது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமையானது சிறந்த விடயமாகும்.

முக்கியமாக இது தொடர்பில் மார்ச் மாதம் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் விடயங்களை முன் வைக்கவுள்ளேன்.

அத்துடன் சர்வதேச மட்டத்தில் எமது நிலைப்பாட்டை மேலும் பலமடையச் செய்யுமளவுக்கு இந்த ஆணைக்குழுவின் அறிக்கை அமைந்துள்ளது. இதனைவைத்து நான் எமது பக்க நியாயங்களை சர்வதேச மட்டத்தில் உறுதியாகத் தெளிவுபடுத்துவேன். முக்கியமாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மனித உரிமை கண்காணிப்பகம் சர்வதேச நெருக்கடிகள் குழு சர்வதேச மன்னிப்புச் சபை என்பன கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து உள்நோக்கத்துடன் விமர்சனங்களை முன்வைத்து வந்தன.

அவ்வாறு உள்நோக்கத்துடன் விமர்சனங்களை முன்வைத்த சர்வதேச நிறுவனங்கள் வாய்மூடுமளவுக்கு இந்த அறிக்கையைக் கொண்டு பதிலளிப்பதற்கு நான் தயாராகியுள்ளேன். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பில் சர்வதேச மட்டத்தை நான் சிறந்த முறையில் தெளிவுபடுத்துவேன். ஜெனிவாவில் நடைபெறவுள்ள மார்ச் மாத அமர்வில் என்னால் இலகுவாக விடயதானங்களை முன்வைக்க முடியும்.

மிகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் சுயாதீனமாகவும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளமை தெளிவாகியுள்ளது. அத்துடன் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது சட்டத்தை மீறி செயற்பட்டிருந்தால் விசாரணை நடத்தி தண்டனை வழங்குமாறு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே அவ்வாறு சட்டத்தை மீறும் செயல்கள் இடம்பெற்றிருந்தால் நிச்சயம் விசாரணை நடத்தப்படும். அது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் எடுக்கும். அதுடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சுகளில் எவற்றை ஏற்பது என்பது தொடரபில் அரசாங்கம் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

அனைத்து பரிந்துரைகளையும் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனை அரசாங்கத்துக்கு இல்லை. காரணம் இது சாட்சியங்கள் பெறப்பட்டு தயாக்கப்பட்ட அறிக்கையாகும். மாறாக விசாரணகள் நடத்தப்படவில்லை. எனவே இது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் எடுக்கலாம் எனவும் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## சமுர்த்தி மலசல கூட நிர்மாணப் பணிகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செயலகத்தின் பிரதேசத்திற்குட்பட்ட மக்களுக்கான மலசலகூடம் அமைக்கும் பணிகள் தற்போது நிறைவுற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 200 மலசலகூடங்கள் அமைப்பதற்கான நிதியுதவியினை சமுர்த்தி அதிகார சபை வழங்கியிருந்தது.

8 மில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டத்தில் மலசலகூட வசதிகளற்ற குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுப் பயனாளிகளாகத் இனங்காணப்பட்டே மேற்படி மலசலகூடங்கள் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது இத் திட்டம் நிறைவு பெற்றுள்ளதாக சமுர்த்தி வேலணைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (85)

## தெற்கு அதிவேகப் பாதையுடன் தொடர்புடைய வீதிகளும் அபிவிருத்தி

(கொழும்பு)

அண்மையில் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்ட தெற்கு அதிவேகப் பாதையுடன் தொடர்புடைய வீதிகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 8 கோடி 50 இலட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியினை ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகளுக்காக 10 கோடி 56 இலட்சம் அமெரிக்க. டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மிகுதியான சுமார் 2 கோடி 6 இலட்சம் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் தெற்கு அதிவேகப் பாதையினை உபயோகிக்கும் மற்றும் அந்த பிரதேசத்தில் வாழும் மக்கள் ஆகியோர் மேலும் பல வசதிகளை பெறுவர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்டோரை விடுவிக்க ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஆதரவு

### கோருகிறது மக்கள் போராட்டக் குழு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வைத்து கடத்தப்பட்ட தமது யாழ் மாவட்ட அமைப்பாளர் லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முரளிதரன் ஆகியோரை விடுதலை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவை கோரவுள்ளதாக ஜே.வி.பியிலிருந்து பிரிந்த மக்கள் போரட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.

இவ்விருவரும் இனந்தெரியாத நபர்களால் கடந்த 9 ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் வைத்து கடத்தப்பட்டனர். இக்கடத்தல் தொடர்பாக அரசாங்கத்தின் மீது அவ்வமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கொழும்பிலுள்ள பல்வேறு வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்களின் தலைவர்களிடம் நேரஅவகாசம் கோரியுள்ளதாகவும் அவர்களுடன் இவ்வாரம் மக்கள் பேராட்ட இயக்கத்தின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளதாகவும் அந்த இயக்கத்தின் அரசியல் விவகார செயலாளர் புபுது ஜாகொட கூறினார்.

ஐரோப்பிய ஒன்றிய, சீனா, கியூபர் தூதுவர்கள் இந்திய உயர் ஸ்தானிகர் ஆகியோருடனும் சந்திப்புக்கு அவகாசம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சி தரப்பிலுள்ள இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகவும் இதற்காக ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுத்துள்ளதாகவும் புபுது ஜாகொட தெரிவித்தார்.

## அறிக்கை குறித்து பல்வேறு நிலைப்பாட்டில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள்

### பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் பல்வேறு நிலைப்பாடுகளை கொண்டுள்ளதாக பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக கூறியுள்ளார்.

ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மனித உரிமை அமைப்புக்கள் இணையத்தளம் ஊடாக அது குறித்து கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன இது குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் முரண்பட்டதாகவே காணப்படுகின்றன.

இலங்கை தொடர்பில் கடும் விமர்சனங்களை எழுப்பிவந்த சர்வதேச மன்னிப்புச்சபை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை முற்றாக நிராகரிக்கவில்லை.

இந்த அறிக்கையில் கவனத்திற்கொள்ளப்படவேண்டிய சில விடயங்கள் உள்ளதை அந்த அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் மனித உரிமைகளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முற்றாக நிராகரிக்கும் வகையில் எமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

## 22 பயணிகள் படுகாயம்

(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் அக்கரப்பத்தனை, மன்ராசி கடை வீதிக்கு அருகில் இன்று திங்கட் கிழமை காலை 11 மணியளவில் தனியார் பேருநது வண்டியொன்று விபததுக்குள்ளாகியுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டனிலிருந்து போர்டைஸ் வழியாக டயகம நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து வண்டி கட்டுப்பாட்டை இழந்தமையால் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலச்சரிவு அச்சுறுத்தலை அறிய புதிய கருவி கொள்வனவு

நிலச்சரிவு அச்சுறுத்தலை முன்கூட்டியே கண்டறிய புதிய கருவி ஒன்றை இலங்கை கொள்வனவு செய்துள்ளது. இதற்கென அரசாங்கம் 16 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

இந்த கருவியை கொண்டு மண் மற்றும் பாறை அடுக்குகளை ஆய்வு செய்ய கூடியதாக இருக்கும் என்று கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் முன்கூட்டியே குறித்த பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டுச் செல்லக் கூடியதாக இருக்கும் என்று ஆராயச்சி நிலையத்தின் தலைவர் ஆர்.எம்.என்.பண்டார குறிப்பிட்டுள்ளார்.






சுகாதார அமைச்சின் கீழ் தொழில்படும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் 26 ஆவது கிளை நேற்று யாழ்.கே.கே.எஸ். வீதியின் சத்திரச் சந்திப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இதன் முகப்புத் தோற்றத்தையும், மருந்துப் பொருட்கள் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பார்த்தீபன்)

# சனிப் பெயர்ச்சி என்பது என்ன?

சனிக்கிரகம் மீது விசேஷ ஆர்வம் பிறந்துள்ள காலமிது. காரணம் சனிப் பெயர்ச்சி. சோதிடர்களின் கணக்குப்படி சனி கிரகம் நாளை (டிசம்பர் 21) துலா ராசிக்குச் செல்கிறது. சனிப் பெயர்ச்சியின் பலன்கள் அடங்கிய சிறு புத்தகங்கள் வெளியாகின்றன. நாளிதழ், வார மற்றும் மாத இதழ்களில் சனிப் பெயர்ச்சியின் பலன்கள் பத்தி பத்தியாக இடம்பெறத் தொடங்கிவிட்டது.


சூரிய மண்டலத்தில் சூரியனை சுற்றும் கிரகங்களில் சனி முக்கியமான ஒன்றாகும். மொத்தமுள்ள எட்டு கிரகங்களில் வியாழன் தான் மிகப் பெரியது. சனி அதற்கு அடுத்த இடத்தை வகிக்கிறது.

சனிக் கிரகத்தை வானில் காண்பதற்கு டெலஸ்கோப் அல்லது பைனாகுலர்ஸ் தேவையில்லை. வெறும் கண்ணால் எளிதில் காணலாம். ஆனால் அது ஒளிப்புள்ளியாகத் தான் தெரியும். சனிக் கிரகத்தின் வளையங்கள் தெரியாது.

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து வானில் தெரிகின்ற கிரகங்களை ஆராயத் தொடங்கினான். வானில் ஓர் இடத்தில் தென்படுகின்ற ஒரு கிரகம் அதே இடத்துக்கு மறுபடி வந்து சேர எவ்வளவு ஆண்டுகள் ஆகின்றன என்பதைக் கணக்கிடலானான்.

வெறும் கண்ணால் பார்த்தால் தெரிகின்ற புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்து கிரகங்களும் வானில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும். இவற்றில் சனிக் கிரகம் தான் மிக மெதுவாக நகருகிறது என்று ஆதி நாட்களில் கண்டறிந்தார்கள். ஆகவே சனிக்கிரகத்துக்கு "சனைச்சர" என்று பெயர் வைத்தனர். சம்ஸ்கிருதத்தில் இதற்கு "மெதுவாகச் செல்கின்ற(து) வன்' என்று பொருள். அப்பெயர் காலப்போக்கில் சனைச்சரன் ஆகியது. பின்னர் சுருக்கமாக சனி என்று அழைக்கப்படலாயிற்று.

சனிக்கிரகம் சூரியனை ஒரு தடவை சுற்றி முடிக்க 29.5 ஆண்டுகள் ஆகின்றன. இத்துடன் ஒப்பிட்டால் வியாழன் கிரகம் சூரியனை ஒரு முறை சுற்றி முடிக்க 11.86 ஆண்டுகளை எடுத்துக் கொள்கிறது. கெப்ளர் (Kepler) என்ற ஜெர்மன் வானவியல் நிபுணர் கண்டறிந்து கூறிய விதிகளின் படி ஒரு கிரகம் எந்த அளவுக்கு சூரியனிலிருந்து மிக அப்பால் உள்ளதோ அந்த அளவுக்கு அது தனது சுற்றுப் பாதையில் மெதுவாகச் செல்லும். சூரிய மண்டலத்தில் சனிக்கிரகம் வியாழனுக்கு அப்பால் ஆறாவது வட்டத்தில் அமைந்துள்ளது.



கொள்ளளவில் சனிக்கிரகம் பூமியை விட 700 மடங்கு பெரியது.

நாம் காணும் வானில் சூரியனும் சந்திரனும் செல்கின்ற பாதையில் தான் கிரகங்களும் நகர்ந்து செல்கின்றன. இப்பாதைக்கு வான் வீதி (zodiac) என்று பெயர். அடையாளம் காண்பதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக அந்த நாளிலேயே வானவியலார் இதை 12 ராசிகளாகப் பிரித்தனர். இந்த ராசிகள் நட்சத்திரங்கள் அடங்கியவை. இந்த ராசிகளின் எல்லைகள் நாமாக கற்பனையாக ஏற்படுத்திக் கொண்டவை. கிரகங்கள் நகர்ந்து செல்லும் போது இயல்பாக இடம்மாறிக் கொண்டிருக்கும். ஒரு கிரகம் சிம்ம ராசியில் இருப்பதாக வைத்துக் கொண்டால் அக்கிரகத்துக்குப் பின்னால் பல கோடி கிலோ மீற்றருக்கு அப்பால் சிம்ம ராசி நட்சத்திரங்கள் இருக்கும்.

அந்த வகையில் வானில் கன்னி ராசி எனப்படும் பகுதி வழியே இது வரை நகர்ந்து கொண்டிருந்த சனிக்கிரகம் கன்னி ராசியின் கற்பனையான எல்லையைக் கடந்து துலா ராசி வழியே நகர்ந்து செல்லத் தொடங்கியுள்ளது. இதுவே சனிப் பெயர்சசி ஆகும். இதிலிருந்து எந்தக் கிரகமும் ஒரு ராசியில் ஒரே இடத்தல் நிலையாக இருப்பது கிடையாது என்பதைப் புரிந்து கொண்டிருக்கலாம்.

டெலஸ்கோப் மூலம் பார்த்தால் சனிக கிரகமானது ஒரு வளையம் நடுவே உள்ள பந்து மாதிரியாகக் காட்சி அளிக்கும். வியாழன், யுரேனஸ், நெப்டியூன் ஆகியவற்றுக்கும் வளையங்கள் உள்ளன என்றாலும் அவை மெல்லியவை. ஆகவே அவை எடுப்பாகத் தெரிவதிலலை. ஆனால் சனிக்கிரகத்தின் வளையங்கள் கண்ணைக் கவர்கின்றன.

சனிக்கிரகத்தை வடிவில் சிறியவையான கோடானுகோடி பனிக்கட்டி உருண்டைகள் சுற்றி வருகின்றன. இவை தான் வளையங்களாகக் காட்சி அளிக்கின்றன. இந்த பனிக்கட்டி உருண்டைகள் அனைத்தும் வியக்கத்தக்க ஒழுங்குடன் சனிக்கிரகத்தைச் சுற்றி வருவது அற்புதமான காட்சியாகும்.

பூமிக்கு ஒரு சந்திரன் தான் உண்டு. ஆனால் சனிக்கிரகத்துக்குப் பெரியதும் சிறியதுமான 62 சந்திரன்கள் உள்ளன. சனி கிரகம் சூரியனிலிருந்து சுமார் 140 கோடி கிலோ மீற்றர் தொலைவிலுள்ளது. அவ்வளவு தொலைவில் சூரியனின் வெபபம் உறைக்காது. ஆகவே சனிக்கிரகம் உறைந்த பனிக்கட்டி உருண்டையாக உள்ளது (சூரியனிலிருந்து பூமி உள்ள தூரம் சுமார் 15 கோடி கிலோ மீற்றர்).


1979 ஆம் ஆண்டில் தொடங்கி பயனியர்--1, வொயேஜர்-1, வொயேஜர்-2 ஆகிய ஆளில்லா விண்கலங்கள் சனிக் கிரகத்தை ஆராய்ந்தன. 1997 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டு 2004 ஆம் ஆண்டில் சனக்கிரகத்தை சென்றடைந்த காசினி-ஹைகன்ஸ் (Cassini-Huygens) விண்கலம் தொடர்ந்து சனிக்கிரகத்தை ஆராய்ந்து படங்களை அனுப்பி வருகிறது.

ரோமானிய புராணத்தில் சனி விவசாயத்தின் கடவுளாகக் கருதப்படுகிறார். இந்திய சோதிட முறையில் சனிக்கிரகம் பாபக் கிரகமாக, கெடுதல் செய்வதாகக் கருதப்படுகிறது.

ஜோசியத்தில் நம்பிக்கை வைப்பது அவரவர் விருப்பம். ஆனால் ஜோசியத்தில் நம்பிக்கை உள்ளவர்களும் சரி, நம்பிக்கை இல்லாதவர்களும் சரி, சனி கிரகத்தின் பெயரையே வசைச் சொல்லாக ஆக்கி விட்டனர். "சனியன் பிடித்த பஸ் எப்பவும் லேற்றா வருது". "சனியன பிடித்த மழை எப்ப நிக்குமோ தெரியேல்ல?" இப்படியாக எதற்கெடுத்தாலும் சனி கிரகத்தைத் திட்டித் தீர்ப்பது நம் வழக்கம்.

சனிக்கிரகத்தை இம்மாதம் 22 ஆம் திகதி தென் கிழக்கு வானில் அதிகாலை 5 மணி அளவில் காணலாம். அடிவானில் சந்திரன் பிறையாகத் தெரியும். அதற்கு மேலே பக்கம் பக்கமாக இரு ஒளிப் புள்ளிகள் தெரியும். இடது புறம் இருப்பது சனிக்கிரகம். வலது புறம் இருப்பது சித்திரை (Spica) நட்சத்திரமாகும்.

- என். ராமதுரை




# அள்ள அள்ள விருது

ஒருவழியாக இந்த வருடத்துக்கான ஒஸ்கார் விருதை தன் பங்குக்கு அள்ளுவதற்காக கணிசமான இடங்களில் 'துண்டு' போட்டு இடம்பிடித்து விட்டது 'வோர்னர் பிரதர்ஸ்'. இதற்காகவே வேலை மெனக்கெட்டு அவர்கள் தயாரித்திருக்கும் படம்தான், 'எக்ஸ்ட்ரிமிலி லவுட் அண்ட் இன் கிரிடிபிளி க்ளோஸ்' (extremely loud and incredibly close) ஹொலிவுட் திரைப்படம்.

றூம போட்டு யோசித்திருப்பார்கள் போலிருக்கிறது. பக்காவாக பட வெளியீடு குறித்து திட்டமிட்டிருக்கிறார்கள். டிசம்பர் 25 கிறிஸ்மஸ் அன்று அமெரிக்காவில் கொஞ்சம் திரையரங்குகளில் மட்டும் விளம்பரங்கள் இன்றி கமுக்கமாக இப்படம் வெளியாகும். ரசிகர்கள் சுதாரிப்பதற்குள் திரையரங்குகளை விட்டு படத்தை எடுத்துவிடுவார்கள். ஆனால், மீடியாக்களில் படம் குறித்த விமர்சனங்களும், செய்திகளும் வந்தபடி இருக்கும். வேறு வழியில்லை, படத்தை பார்த்தே ஆக வேண்டும்... இல்லாவிட்டால் நம்மை மொக்கை லிஸ்டில் தள்ளிவிடுவார்கள்... என்ற நிலைக்கு ரசிகர்கள் வந்ததும் பிரம்மாண்டமான முறையில் விளம்பரங்கள் வர ஆரம்பிக்கும். பிறகென்ன... ஏராளமான திரையரங்குகளில் உலகெங்கும் வரும் ஜனவரி 20 அன்று இப்படம் (மறு)வெளியீடு செய்யப்படும்.

காரணம் என்ன தெரியுமா? இப்படம் வெளியான நான்கு நாட்கள் கழித்து - அதாவது ஜனவரி 24 அன்றுதான் - 2011 ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருது போட்டியில் பங்கு பெறும் படங்களின் வரிசை வெளியாகிறது!

3 முறை சிறந்த இயக்குநருக்கான ஒஸ்கார் விருது பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்டவரான ஸ்டீ.ஃபன் டால்ட்ரி இப்படத்தின் இயக்குநர். சிறந்த நடிகர் மற்றும் சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதை முன்பே வென்றிருக்கும் ரொம் ஹாங்க்ஸ், சான்ரா புல்லக் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள்.

ஜொனாதன் ச.ஃப்ரான் .ஃபோயர் எழுதிய நாவல். நாவலின் பெயரையே படத்தின் தலைப்பாகவும் சூட்டியிருக்கிறார்கள். ஒரு சுவாரஸ்யமான தகவல்... 2005 ஆம் ஆண்டு இந்த நாவல் வெளியான போதுதான் 'தி ஹிஸ்ட்ரி ஒ.ஃப் லவ்' நாவலும் வெளியானது. இந்த நாவலை எழுதியவர் நிக்கோல் க்ரவுஸ். இவர், .ஃபோயரின் மனைவி! இவர்கள் இருவருக்கும் திருமணமான ஆண்டும் அதே 2005தான்!! தம்பதிகள் தேனிலவில் மகிழ்ச்சியாக இருந்தபோது, விற்பனையில் இந்த இரு நாவல்களும் சம பலத்துடன் போட்டியிட்டது தனிக் கதை!

செப்டெம்பர் 11 ஐ அவ்வளவு சுலபத்தில் அமெரிக்காவால் மறக்க முடியாது. இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதும், பென்டகன் தாக்குதலுக்கு உள்ளானதும், ஒசாமா பின்லேடன் பரவலாக அறியப்பட்டதும் இந்தத் துன்ப நிகழ்வுக்குப் பிறகுதான். படத்தின் கதை, இந்தச் சம்பவத்திலிருந்துதான் தொடங்குகிறது. ஒஸ்கார் (என்ன பெயர்ப் பொருத்தம் பாருங்கள்!) என்னும் சிறுவனின் தந்தை, 9/11 தாக்குதலின்போது உயிர் இழக்கிறார். தந்தையின் நினைவில் வாடும் சிறுவனின் கரங்களில் ஒரு சாவி கிடைக்கிறது. அது, அவன் அப்பா பொக்கிஷமாக கருதி வந்த சாவி. ஆனால், எதனுடைய திறவுகோல் அது என்பது அவனுக்கு தெரியாது.

அதைத் தேடி புறப்படுகிறான். எண்ணற்ற மனிதர்களைச் சந்திக்கிறான். அவர்கள் அனைவருமே செப்டெம்பர் 11 ஆல் பாதிக்கப்பட்டவர்கள். இறுதியில் எங்கிருந்து புறப்பட்டானோ, அதே இடத்துக்கு திரும்பி வருகிறான். ஆனால், இப்போது அவன் எதைத் திறக்க வேண்டுமென்று கண்டறிந்துவிட்டான்...

இந்த செண்டிமெண்ட் கதை, ஒஸ்கார் விருதுகளை அண்டா அண்டாவாக அள்ளுவதற்கு தகுதி படைத்ததுதானே? சந்தேகமுண்டா!

- கே.என்.சிவராமன்

# சட்டத்தரணி எம்பியும் சவாலும்



எங்கட சனாதிபதி ஐயாவ முதன்மையாக் கொண்ட அமைச்சர்களுக்கும் எம்.பி மாருக்கும் இடையிலான கிறிக்கற் 20 இற்கு இருபது போட்டி நடந்த தெல்லே அந்தப் போட்டியில எங்கட கூட்டமைப்பின்ர முதுகெலும்பா இருக்கிற சுமந்திரன் ஐயாவும் எல்லே மட்ட எடுத்து விளாசியிருக்கிறார்.

அவர் விளாசினது பெரீய விசயம் இல்ல கண்டியளோ? சனாதிபதி ஐயாவுக்கு நல்லெண்ணத்தக் காட்டவேணும் எண்ட நோக்கத்திலயும் அதவைச்சு எங்கட(?) சனத்துக்கு ஏதாவது தீர்வப் பெற்றுக் கொடுக்க வேணும் எண்டு அவர் நினைச்சுத்தான் விளையாடக் களத்தில இறங்கியிருப்பார் எண்டதும் புரியுது கண்டியளோ?

ஆனால் பாருங்கோ, அவர் வந்து சனாதிபதி ஐயாவுக்கு எவ்வளவு விசுவாசமானவர், எண்டத சனாதிபதி ஐயாவே பேச்சுவார்த்தைக்குப் போறவைக்கு சொல்லியிருக்கிறாராம் எண்டால் பாருங்கோவன். தீர்வு குடுக்குறதெண்டால் சம்பந்தரும், சுமந்திரனும் கூட்டமைப்பில இருக்கேக்கயே குடுத்திட வேணும் பிறகு வாறவயள நம்ப ஏலாது எண்டு சனாதிபதி ஐயாவே சொல்லியிருக்கிறாராம் எண்டால் பாருங்கோவன். சுமந்திரன் ஐயாவிலயும், சம்பந்தன் ஐயாவிலயும் சனாதிபதி ஐயா வைச்சிருக்கிற விசு(!)வாசத்த.

இதுக்கிடயில இன்னொரு வில்லங்கமும் நடந்திருக்கு கண்டியளே?, தெரிவுக்குழு சம்பந்தமான முடிவ கூட்டமைப்பு அறிவிச்சது தானே? அதுக்கு முதல் நாள் கூட்டமைப்பு எம்பிமார அவசரமா சந்திச்ச சம்பந்தன் ஐயாவும், சுமந்திரன் ஐயா வும் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பில இருந்து ஆக்களின்ர பேரக் குடுக்கோணும், இல்ல எண்டால் பிறகு எங்களுக்குச் சிக்கல். பேரக் குடுப்பம் அரசாங்கத்திட்டக் கேப்பம் வெளியில சொல்ல வேண்டாம் எண்டு. இப்பிடியும் கேட்டிருக்கினமாம் என்ன?. ஆனால் பாருங்கோ மாவை ஐயாவும் அதில இருந்த மற்ற எம்பிமாரும் இத கடுமையா எதிர்த்தவயாம். இல்லை எண்டா அண்டைக்கே அரசாங்கத்தின்ர தெரிவுக்குழுவில நம்மட கூட்டமைப்பு எம்பிமார்ர பேருகளையும் அவை குடுத்திருப்பினமாம் என்ன?

அதவிட பெரீய சோக் என்னண்டால், கிறிக்கற் விளையாடினது சம்பந்தமா கருத்துச் சொன்ன இவையின்ர எம்பி ஒராளுக்கு எதிரா ஒரு கோடி ரூபா நட்டஈடு கேட்டு வழக்குப் போடப்போறன் எண்டு சட்டத்தரணி எம்பி சவாலும் விட்டவராம். பிறகு அவரே தான் சனாதிபதி ஐயாவோட கிறிக்கற் விளையாடினத ஒப்புக்கொண்டும் இருக்கிறாராம் எண்டால்.... அப்ப பாருங்கோவன் ஆ...

- சுரேஷ் ஆதரவு இணையத்தளத்தில்....

# தூய்மையான யாழ். நகரம் விடாமுயற்சியில் மாநகர சபை

(நேற்றைய தொடர்ச்சி)

சுகாதாரப் பரீட்சைகளில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான உணவுப் பரிசோதனைகள் நடவடிக்கைகளின் மூலம் இந்நோய் நிலைகள் குறைக்கப்பட்டுள்ளதை உணரக்கூடியதாக உள்ளது. மற்றும் உணவு நீர் சம்பந்தமான நோய்கள் சார்பான ஆய்வறிக்கையில் யாழ். மாநகராட்சி மன்ற உணவு நிலையங்களில் உணவு உட்கொண்டதின் மூலம் இந்நோய்கள் தமக்கு ஏற்பட்டது எனப் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடோ மற்றும் மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தொற்றுநோய் சார்பான ஆய்வறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை.

அவ்வாறு சம்பவங்கள் நடைபெறுமிடத்து நேரடியாகச் சம்பந்தப்பட்ட பகுதிப் பொதுச் சுகாதாரரின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவித்தல் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுவரை 2011 ஆம் ஆண்டில் 11 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திலை ரூபா 90,00 (தொண்ணூறு ஆயிரம்) தண்டப்பணமும் அறவிடப்பட்டதுடன் உணவு கைப்பற்றல்கள் 59 தடவைகள் நடைபெற்று அவை அழிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுமுள்ளது.

5 நிலையங்கள் பூட்டப்பட்டு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மீளவும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்படி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணிக்கபபட்டுள்ளார்கள். மேலும் 2011 ஆண்டு 12 உணவு மாதிரிகள் கொழும்பு அரசாங்க உணவுப் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அவற்றின் தரம் சரியாகவுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து இவ் உணவுச் சுகாதார சேவைகள் தொடர்ந்தும் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். யாழ். மாநகரசபைப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் 2009 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்துக் காணப்பட்டமையால் டெங்குநோய்க் கட்டுப்பாட்டில் கூடிய கவனம் செலுத்தி டெங்குநோயை யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் கட்டுப்பாட்டில் வைத்திருக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

டெங்குநோய் சார்பான புள்ளி விபரங்களை எடுத்து நோக்கும்போது யாழ். மாநகரப் பகுதியில் அறிவிக்கப்பட்ட டெங்கு நோயாளர்களின் விபரம் முறையே 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இவற்றின் எண்ணிக்கை 95, 639, 77 ஆகவுள்ளதையும் 2011 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்த மார்கழி 15 வரை முறையே மாதரீதியாக 28, 12, 05, 03, Nil, 02, 06, 11, 09, Nil, 92, 01 ஆகக் காணப்படுகின்றது.

ஆவணி மாதம் (01) ஒரு டெங்கு இறப்பும் ஏற்பட்டுள்ளது. இவ் இறப்பானது வெளி மாவட்டத்திலிருந்து இங்கு தங்கியிருந்தவர்கள் மூலம் தொற்று ஏற்பட்டு இறப்பு உண்டானதை எமது ஆய்வின் மூலம் உணரக் கூடியதாக இருந்தது. யாழ். மாநகரசபை இக்கொடிய டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு மண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருட்களைக் கொள்வனவு செய்திருந்ததையும் புகையூட்டல் மூலம் இந் நுளம்புகளை அழிப்பதற்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் உதவியுடன் ஏனைய வெளிமாவட்ட 03 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவு சேவையாளர்களையும் இணைத்து பாரிய புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 2010 ஆம் ஆண்டு 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். மாநகரப்பகுதியில் உள்ள வடிகால்கள், சிறிய நிர்த்தேக்கங்களுக்கு 05 கிலோ அபேற் என்ற இரசாயனப் பொருளும் மற்றும் வேண்டிய இடங்களுக்கு B.T.I(பீ.ரிஐ) என்ற பக்றீரியாவும் நுளம்பின் குடம்பிகளை அளிப்பதற்கு விசிறியமையும் குறிப்பிடத்தக்கது. மற்றும் 2010 இல் யாழ். மாநகர முதல்வர் ரூபா 100,000 மேலான பணத்தை டெங்கு நோய்க்கு எதிரான புகையூட்டலிற்குப் பயன்படுத்தப்படும் பெஸ்காட் என்ற மருந்து கொள்வனவிற்காக மாநகர நிதியிலிருந்து வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

விலங்கு விசர் நோய்க்கெதிரான தடுப்பு நடவடிக்கையில் 2011 ஆம் ஆண்டு இதுவரை மொத்தமாக 4928 நாய்களுக்கு விலங்குவிசர் நொய்க்கெதிரான தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் 237 பெண் நாய்களுக்கும், 12 ஆண் நாய்களுக்குமாக மொத்தம் 249 நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் 174 நாய்களுக்கு கருத்தடை ஊசி வழங்கப்படடுள்ளது. இவற்றைவிட அண்ணளவாக 500 இற்கு மேற்பட்ட மானிய உதவியுடன் கட்டப்படும் மலசலகூடத்திற்கான இடத்தெரிவுகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மிகக் குறுகிய காலத்தில் பரீட்சிக்கப்பட்டு அவற்றைக் கட்டுவதற்கான இடங்கள் தெரிவுசெய்து இம்மானியத் தொகையை திரும்ப விடாமல் தொடர்ந்த பரீட்சினைகள் மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பொதுக் கிணறுகளுக்கு குளோரின் ஏற்றம் செய்யும் செயற்பாடு ஆனது பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. பிரதி திங்கட்கிழமைகளில் யாழ்.நகர் I, யாழ் நகர் II, குருநகர் I, பொ.சு. பிரிவில் பிரதி செவ்வாய்க்கிழமைகளிலும் நாவாந்துறைப் பகுதியில் பிரதி புதன்கிழமைகளிலும், அரியாலை, கொழும்புத்துறைப் பகுதியில் பிரதி வியாழக்கிழமைகளிலும் வண்ணார்பண்ணை, நல்லூர் பகுதியில் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


தற்போது வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட J/83, J/88 வரையான கிராம சேவகர் பிரிவுகளில் நாவாந்துறை பொ.சு. பரிசோதகரினால் அப்பகுதியிலுள்ள சகல கிணறுகளுக்கும் குளோரினேற்றம் செய்யப்பட்டுள் ளதை பொதுவாக சுமார் 20 நிமிடங்களுக்கு நீரைக் கொதி நிலையில் வைத்திருந்து ஆறவிட்டு நீரைப் பரு கும்படி பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கும்படி சகல பொ.சு. பரிசோதகர்கள், சு. பாதுகாவலர்கள், குடும்ப நல உதவியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். இவற்றிற்கு மேலாக, யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற எல்லைக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் தங்குமிட விடுதிகள் சார்பான சுகாதார நிலைமைகளையும் அவ்வப பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண் காணித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பும் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதர்களுக்கு தற்போது மேலதிக வேலையாக அமைந்துள்ளது. குறிப்பாக தென்பகுதியிலிருந்து வரும் அநேக பயணிகள் யாழ். மாநகர பகுதியை தற்காலிக தங்குமிடமாகப் பயன்படுத்தி வருவதால், காளானகள் முளைப்பது போல் அவ்வப்போது வதிவிட வீடுகள் தங்குமிட விடுதிகளாக பாவிக்கப்படுவதையும் உணரக் கூடியதாக உள்ளது.

இவர்கள் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு அனுமதிக்காக விண்ணப்பிக்கவும் இல்லை. 2011 ஆம் ஆண்டு 14 விடுதிகளுக்கு மட்டுமே அனுமதிப் பத்திரத்திற்கு சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அனுமதியற்ற தங்கு மிட விடுதிகள் சார்பாக உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகாகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை பதிவு செய்யப்படாத இவ் நிலையங்களை உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ்ப்பாணத்தில் பதிவுகளை மேற்கொள்ளும்படி ஏற்கனவே பத்திரிகை அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருந்தும், இதுவரை 5 நிலையங்களே தங்களைப் பதிவு செய்யுமாறு வேண்டியுள்ளனர்.

எனவே, பதிவு செய்யாத நிலையங்களில் காணப்படும சுகாதாரம் சார்பான குறைபாடுகளை இனங் கண்டு குறிப்பாக மலசலகூட வசதி, திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம், கழிவு நீர் பரிகரிப்பு முறை, இடவசதி, ஏணைய கட்டட அமைப்பு முறை போன்றன சார்பாக பரீட்சித்து, குறைபாடுகளை இனம் கண்டு அறிவித்தல்களை வழங்கி இவ்வகையான நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படி, சகல பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் பணிக்கப்பட்டுள்ளார்கள். அண்மைக் காலங்களில் மேற்படி சில நிலையங்களில் நடைபெறும் கலாசாரச் சீரழிவுகள் போன்ற செயற்பாடுகளிற்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களே பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஆவார்கள். அவர்கள் தற போது மேற்படி விடயம் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதை அறியக்கூடியதாகவுள்ளது.

மேற்படி யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள தங்குமிட விடுதிகளிற்கான அறிவுறுத்தல் கூட்டம் 22.12.2011 (செவ்வாய்க்கிழமை) மு.ப. 9.30 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மணடபத்தில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் சகல தஙகுமிட விடுதியின் உரிமையாளர்களும் கலந்து கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றார்கள். மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து திரு.க.ஆ.ஜீவநாதன் கையடக்கத் தொலைபேசி இல -0774047243 அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இல - 0212222645 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

க.ஆ.ஜீவநாதன்
பிரதம பொதுச்சுகாதாரப் பரிசோதகர்
உணவுப் பரிசோதகர்,
யாழ். மாநகரசபை,



## மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் சகபாடிகளின் பங்களிப்பு

இரா.ரமணன் (ஆசிரியர்),
சென்.பற்றிக்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

"நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

இது ஐயன் வள்ளுவன் சொன்ன வாய்மொழி. படிக்கப்படிக்க இன்பம் தரும் நூலினைப் போல பழகப்பழக எம் மனதிற்கும், வாழ்விற்கும் இன்பம் தர வல்லது நட்பு.

"உன் நண்பனைப் பற்றிச் சொல்
நான் உன்னைப் பற்றிச் சொல்லுவேன்" என்பதும் பிரபல கூற்று. இந்த மண்ணில் பிறந்த மனிதரில் எதிரிகள் இல்லாமல் யாரும் மடிந்திருக்கலாம். ஆனால் நண்பன் இல்லாமல் யாரும் வாழ்ந்தார்களா?

"உலகில் மிகப்பெரும் ஏழை நண்பனில்லாதவன்" என்னும் திரைப்பாடலின் வரி அருமையாக நட்பின் மேன்மையை உணர்த்தி நிற்கின்றது. ஒரு மாணவப் பருவத்திலே அந்த மாணவனின் ஆளுமை வளர்ச்சியில் பெரும் பங்காற்று பவன் நண்பனே. ஒரு மாணவன் தன் பெற்றோருடனோ, ஆசிரியருடனோ மற்றும் ஏனைய தன் சகோதரர்களுடனோ அல்லது உறவினர்களுடனோ செலவிடும் நேரத்தைவிட அதிகமான நேரத்தை தன் உடன் பயணிப் போனான தன் சகபாடியுடனேயே செலவிடுகின்றான்.

தன் தாயிடம் பகிர்ந்து கொள்ளமுடியாத பல விடயங்களை தனது நண்பனிடமே பகிர்ந்து கொள்கின்றான். தன உணர்வெழுச்சிகள், இரகசியங்கள், எதிர்காலத் திட்டங்கள், ஆசைகள், ஏக்கங்கள், கனவுகள், இலட்சியங்கள் குறிப்பாக தனது வெற்றிகள், தோல்விகள் அனைத்தையும் தன் நண்பன் ஒருவனிடம் மட்டுமே அவன் பகிர்ந்து கொள்கின்றான்.

அந்த வகையிலே ஒருவனின் நிறைகுறைகளையும் ஆற்றல் திறமைகளையும் நன்கு அடையாளங் கண்டு கொள்பவர்கள் அவனது நண்பர்களே. ஒரு வகுப்பறையிலே சென்று "உங்களுக்குள் நன்றாக வாசிக்கக் கூடியவர் யார்? கதை சொல்லக்கூடியவர் யார்? கவிதை எழுதக்கூடியவர் யார்? என்று கேட்டால் எந்தவொரு மாணவனும் முதலில் தன்னை அடையாளப்படுத்தி, முதன்மைப்படுத்தியிருக்கமாட்டான். மாறாக தன் சகபாடியையே அடையாளம் காட்டி நின்றதனை ஒவ்வொரு ஆசிரியரும், மாணவரும் தமது பாடசாலைக் காலத்தில் கண்டு,கடந்து வந்த சம்பவங்களாக இதனைக் கூறலாம்.

எவ்வாறாயினும் ஆளுமை என்பது ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஊற்றெடுக்கும் அற்புத அதிசய நீர்வீழ்ச்சி. அதன் தொடக்கத்தை நீ கண்டுகொண்டால் போதும். அது உன்னை வெற்றிச் சமூகத்திலே சமூகத்தின் சிகரத்திலே புகழின் உச்சியிலே உன்னை ஏற்றிவிடும். அவ்வாறாக ஒருவன் சாதனை நிலைநாட்ட, அவனது ஆற்றல் திறமைகளை வெளிக்கொணர கரம் தந்து உதவுபவன் நண்பன் ஒருவனே.

ஆனால், நாம் தேர்ந்தெடுக்கும் நண்பர்கள் எம் சாதனைக்கு வழிகாட்டிகளாய் வழிசமைத்துத் தருவோராய் அமைந்தால், அது சாதனையைத் தரும். மாறாக அவனே எம் வழிகளில் படுகுழிகளை அமைப்பானாயின் அது வேதனையாக மாறிப்போகும்.

ஒரு மாணவனது ஆளுமை வெளிப்பாட்டில் அவனது குடும்பம். பாடசாலையினையே நம்பியிருக்கின்றது. பாடசாலையில ஆசிரியரின் வழிகாட்டல்கள் அவனது ஆளுமைகளில் திருப்புமுனைக்கான வளர்ச்சிக்கான தூண்டல்களை மட்டுமே வழங்க முடியும். ஆனால் ஒரு மாணவனது வெற்றிகரமான ஆளுமை வெளிப் பாட்டிற்கு அவனது சகபாடியின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்று என்றே கூறலாம்.

நண்பனின் வெற்றியின்போது தட்டிக்கொடுப்பதும், தோல்விகளின்போது தோள்கொடுப்பதும் மட்டும் உண்மையான நட்பில்லை. மாறாக நண்பன் தவறு செய்யும்போது, அதனைச் சுட்டிக்காட்டுவதும் அவனை நல்வழிப்படுத்த முயல்வதும் தான் உண்மையான நட்பு, இதனையே வள்ளுவனும்

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" எனக் கூறுவதிலிருந்து மிகத் தெளிவாகின்றது.

அத்தோடு ஆளுமை வளர்ச்சியிலே சகபாடியின் பங்களிப்பை நோக்கும்போது, இன்றைய காலச் சூழ்நிலையிலே நவீன கலாசாரமும், போதைப் பொருட்களின் பாவனையும், தொடர்பாடல் யுகத்தின் விருத்தியும் பள்ளி மாணவர்களை மையப்படுத்தியதோடு, முகநூலும் (Face book) இணையத்தளமும் கைத்தொலைபேசியின் தொலைக்கவே முடியாத ஆதிக்கமும், மாணவனது ஆளுமையை மறைகோட்டிலே நகர்த்தி, பாதாளம் நோக்கி பாதை காட்டுகின்றது. எனவே, இத்தகைய இக்கட்டான காலத்திலே எமது ஆளுமைகள் வளம்பெற வாழ்வு வளம்பெற வேண்டுமாயின் உங்கள் சகபாடிகளை நல்லவர்களாக அனைத்திலும் வல்லவர்களாகத் தேர்ந்தெடுங்கள்.

"நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதனை விட
மேலான அன்பு யாரிடமும் இல்லை" என்கிறது விவிலியம் காவிய புருஷர்கள் தெய்வங்களை நண்பராக்கினர். முடியுடை வேந்தனைத் தோழராக்கினர். மாணவர்களே! உங்கள் சகபாடிகளை நம்புங்கள், உங்களால் "காற்றிலேறி விண்ணையும் சாட முடியும்" உங்கள் முதுமையிலே பாடசாலை நாட்களை நினைவேட்டின் பக்கங்களில் புரட்டிப் பார்க்கும்போது அங்கே பொறிக்கப்பட்டிருக்கும் அழகான, ஆழமான அற்புதமான நட்புக்கள் அந்த நினைவுகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும். இளமையின் வேகம் முட்டி மோதும் மாணவர்களே! நீங்கள் பலரது வரலாற்றைப் படித்திருப்பீர்கள். ஆனால், நல்ல நண்பர்களைத் தேர்ந்து கொள்ளுங்கள் அப்போது உங்களைப் பற்றி நாளைய தலைமுறை படிக்கும்.

# கூடங்குளமும் மக்கள் போராட்டமும்




(நெல்லை)

கூடங்குளம் அணுஉலையை எதிர்த்து இடிந்தகரை மற்றும் சுற்றுவட்டார மக்கள் சுமார் 10 ஆயிரம் பேர் நேற்றுமுன்தினம் கூடங்குளத்திலிருந்து ராதாபுரம் வரை 10கி.மீ. தூரம் நடை பயணம் மேற்கொண்டனர். ரஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூடங்குளத்தில் அணுமின் நிலையத்தை இந்திய மத்திய அரசு நிறுவியது. இதை அப்பகுதி மக்கள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர். இந்த ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் அணுமின் உற்பத்தி தொடங்கப்படும் என்று அறிவித்ததையடுத்து மீண்டும் போராட்டம் வெடித்தது.


தூத்துக்குடி மாவட்டத்தில் 50இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேர் இடிந்தகரையில் கூடங்குளம் விலக்கில் உள்ள பத்திரகாளியம்மன் கோயில் முன்பு கூடினர்.

போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் மற்றும் போராட்டக்குழுவினர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு ஊர்வலத்தைத் தொடங்கினர். ஊர்வலத்தில் குழந்தைகளும், முதியவர்களும் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள், பெண்கள், “அணு உலை உயிருக்கு உலை” என்ற வாசகங்கள் அடங்கிய கறுப்பு ரிசேர்ட்டுகள் அணிந்திருந்தனர். கைகளில் கறுப்புக் கொடி ஏந்தியிருந்தனர். கூடங்குளம் அணுஉலையை உடனே மூடு என்று கோஷமிட்டவாறு நடந்து சென்றனர்.

# இன்னும் இயங்கவில்லை பல கோடி ரூபா இழப்பு

(சென்னை)




கூடங்குளம் அணு உலை இன்னும் இயங்காததால், அணு உலை பராமரிப்பு மற்றும் ஊழியர்களின் சம்பளம் என மாதம் எட்டு கோடி இந்திய ரூபாய் செலவாகிறது என, கூடங்குளம் அணுமின் நிலைய இயக்குநர் காசிநாத் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஜப்பான் அணு உலை, மிகவும் பழமையானதோடு, கடல் மட்டத்தில் இருந்து, கீழே அமைக்கப்பட்டு இருந்ததால், சுனாமியின் போது கடல் நீர் புகுந்து சேதப்படுத்தியது. ஆனால் கூடங்குளம் அணுமின் உலையில் உள்ள அனைத்துக் கட்டடங்களும், கடல் மட்டத்தில் இருந்து, 7.5 மீ. முதல் 13.5மீ. உயரத்தில் பல்வேறு வடிவமைப்பில் அமைக்கப் பட்டுள்ளன. இலக்கு நிர்ணயித்த காலத்தில், கூடங்குளம் அணுஉலை செயற்பாட்டுக்குக் கொண்டு வர முடியாததால், பராமரிப்பு மற்றும் ஊழியர்களின் சம்பளத்திற்காக, மாதம் எட்டு கோடி இந்திய ரூபாய் செலவாகிறது எனத் தெரிவித்தார்.

இதேவேளை கூடங்குளம் அணு மின் நிலையத்தில் டிச. முதலாம் திகதி முதல் மின் உற்பத்தியை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி அணு உலைகளில் இருந்து தினமும் 240 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரித்து, ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை, 2.50 முதல் 3 ரூபாய் வரை விற்பனை செய்ய, இந்திய அணு மின் கழகம் திட்டமிட்டிருந்தது. யூனிட் 2.50 ரூபாய் என வைத்துக் கொண்டால், ஒரு நாளைக்கு 6 கோடி ரூபாய் வீதம், 17 நாளைக்கு, 102 கோடி இந்திய ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என இந்திய அணுமின் கழக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# போராட்டம் வலுக்கின்றது

(உத்தமபாளையம்)



முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசைக் கண்டித்தும், கேரளாவில் தமிழர்கள் தாக்கப்படுவதற்கு கண்டனம் தெரிவித்தும் மக்கள் போராட்டம் முற்றுகிறது. தேனி மாவட்டத்தில் 14ஆவது நாளாகவும் நேற்றுமுன்தினம் போராட்டம் தொடர்ந்தது. கேரள எல்லையை நோக்கி, 75 ஆயிரம் பேர் பங்கேற்ற பேரணியை கம்பம், கூடலூரில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். பதற்றம் நிலவுவதால் 3 ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையால் கேரள மாநிலம் பொருளாதார பாதிப்பைச் சந்திக்கும் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ எச்சரித்துள்ளார்.

அவர் மேலும், கேரள அரசின் விஷமப் பிரசாரத்தைக் கண்டித்தும், முல்லைப் பெரியாறில் தமிழகத்திற்குள்ள உரிமைகளை நிலை நாட்ட வலியுறுத்தியும் நாளை தமிழக - கேரள எல்லையில் 13 இடங்களில் அறவழியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவோம்.

இதனை பல அரசியல் கட்சிகள், கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம், விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் இணைந்து நடத்துகின்றன. கேரள அரசு தனது முடிவை மாற்றாவிட்டால், கேரளாவுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அனுப்புவதைத் தடை செய்யும் போராட்டம் தொடர்ந்து நீடிக்கும். வேறு வழிகளில் பொருட்களை வாஙகக கூட அதிக விலை கொடுக்க வேண்டி இருக்கும். இதனால் பொருளாதாரப் பாதிப்பு நிச்சயம் எனத் தெரிவித்தார்.

# பெரியாறு விவகாரம் - வியாபாரம் பாதிப்பு

(குமுளி)

முல்லைப் பெரியாறு அணை தொடர்பான போராட்டம் காரணமாக, 70 கோடி இந்திய ரூபா மதிப்பிலான ஏலக்காய் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழக எல்லையில் உள்ள கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் சுமார் 33 ஆயிரம் ஹெக்டேயரில் ஏலக்காய் பயிரிடப்பட்டுள்ளது. இவற்றில் 60 சதவீத தோட்டங்கள் தமிழர்களுக்குச் சொந்தமானவையாகும்.




இதில் சுமார் 20 ஆயிரம் தமிழக தொழிலாளர்கள் தினமும் எல்லையைக் கடந்து சென்று, வேலை செய்து வருகின்றனர். அறுவடை செய்யப்பட்ட ஏலக்காய் தினமும் ஏலம் விடப்படுவது வழக்கம். இதன் மூலம் சராசரியாக தினமும் 5 கோடிக்கு வர்த்தகம் இடம் பெறும்.

இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பான போராட்டம் 2 வாரத்துக்கும் மேலாக தொடர்வதால், இரு மாநிலங்களுக்கு இடையிலான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஏலக்காய் விவசாயிகள், தொழிலாளர்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் அது தொடர்பான தொழிற்சாலை அதிபர்கள் ஆகியோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 5ஆம் திகதி முதல் ஏலக்காய் ஏலம் விடப்படவில்லை. மேலும், ஏலக்காய் ஏற்றப்பட்ட வாகனங்கள் வெளியேற முடியாமல் களஞ்சியங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. 14 நாட்களாக வர்த்தகம் முடங்கியதால், சுமார் ரூ.70 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது என ஏலககாய் வர்த்தக நிறுவன முகாமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# முல்லைப் பெரியாறு-வித்தியாசமான செய்தி

(மதுரை)



பெரியாறு அணையைக் கட்டிய ஆங்கிலேயரான பென்னிகுக் என்ற பெயரை மதுரையில் இரும்பு வியாபாரி ஒருவர, 2005இல் பிறந்த தன் மகனுக்கு அப்பெயரை வைத்து பெருமைப்பட்டுள்ளார். இது பற்றி அவர் குறிப்பிடும் போது, 1985 இல் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் பென்னிகுச் சிலை திறப்பு விழாவின்போது, பத்திரிகை ஒன்றில் அவரை பற்றி செய்தி வந்திருந்தது.

இந்தியாவை சுரண்ட வந்த ஆங்கிலேயர்களுக்கு மத்தியில், மனைவியின் நகைகளை விற்று, தவித்த வாய்க்கும், பசி போக்கவும் பெரியாறு அணை கட்டிய பென்னிகுக் என்னை ஈர்த்தார். அப்போது எனக்கு திருமணமாகவில்லை என்றாலும், ஆண் குழந்தை பிறந்தால் “பென்னிகுக்” பெயரை சூட்ட முடிவு செய்தேன். பத்தாண்டுகளுக்குப் பின் திருமணம் நடந்தது.

2005இல் ஆண் குழந்தை பிறந்தபோது, “ஸ்ரீராம் பென்னிகுக்” என பெயரிட்டேன். “ஒரு கிறிஸ்துவர் பெயரை வைக்கலாமா” என குடும்பத்தினர் முதலில் கோபப்பட்டனர். அதைப்பற்றி கவலைப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வௌவால்களை வணங்கும் மக்கள்

(கிருஷ்ணகிரி)



போச்சம்பள்ளி அடுத்த விருப்பம்பட்டியில் உள்ள ஆல மரத்தில் ஆயிரக்கணக்கான வௌவால்கள் உள்ளன வாம் இதை அந்தப் பகுதி மக்கள் தெய்வமாகப் பாவித்து, மாட்டுபபொங்கல் அடுத்த நாள் விழா நடத்தி வழிபடுகின்றனர்.

பாலூட்டி வகையைச் சேர்ந்த வௌவல்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சில கிராமங்களில் மட்டும் பழமையான மரங்களில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன. பகல் முழுவதும் உணவிற்காக வெளியே பறந்து செல்லும் வௌவால்கள், இரவு நேரங்களில் குறிப்பிட்ட மரத்தில் தங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

ஊரை விட்டுச் சிறிது தூரம் சென்றால் ஆள்நடமாட்டமின்றியும், வாகனங்களின் சத்தம் இன்றியும் உள்ள ஏரியோரம் வௌவால்கள் வாழ்வதற்கு ஏற்ற மிதமான சீதோஷ்ணநிலை நிலவி வருவதால் அவை எவ்வித பிரச்சினையும் இன்றி அங்கு தொடர்ந்து வாழ்ந்து வருகிறது.

அவ்வூரில் வசித்து வரும் வௌவாலகளை எவரும் வேட்டையாட அந்தக் கிராம மக்கள் அனுமதிப்பதில்லை. ஆண்டுதோறும், மாட்டுப்பொங்கலுக்கு அடுத்த நாள் வௌவால்கள் வாழும் மரத்தடியில் பொதுமக்கள் ஒன்று கூடி படையல் வைத்து எவ்வித ஆரவாரமும் இன்றி வழிபாடு நடத்துகின்றனர்.

படையலில் வைக்கும் பொங்கலைச் சாப்பிட்டால் தீராத வியாதிகள் குணமாகும் என அவ்வூர் மக்கள் நம்பிக்கை கொண்டு பின்பற்றி வருகின்றனர்.

இந்த ஊரில் தீபாவளியின் போது வெடி கொழுத்துவதில்லை. கிராமத்தில் எவராவது இறந்து விட்டால் கூட வெடி கொழுத்துவதில்லை. மேளம் அடிப்பவர்கள் கூட ஊருக்கு வெளியே மட்டுமே மேளத்தை அடிப்பார்களாம்.


## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



**4 ஆவது அகவையில்**

ஐஸ்நோவர் திரிசாள்

நாவலடி ஒழுங்கை,
வண்.வடமேற்கு, யாழ்




வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ......................................
முகவரி : ......................................
பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

உலகச் செய்திகள்

# வடகொரிய ஜனாதிபதி மாரடைப்பால் மரணம்



வடகொரியா தலைவர் ஹிம் ஜொங் (வயது -69) 1941 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, பிறந்த இவர் 1994 ஆம் ஆண்டு முதல வடகொரியாவின் ஆட்சியாளராக பதவி வகித்து வந்தார். இவர் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உயிரிழந்ததாக வடகொரிய அரச தொலைக் காட்சி நேற்று அறிவித்துள்ளது.

தலைநகர் பியோங்கியாங்கிற்கு வெளியே ரயில் பயணமொன்றில் ஈடுபட்டிருந்த தலைவர் கிம் ஜோக் இல், அதிக உடல், உள வேலைப் பளுவினால் உயிரிழந்ததாக அரசாங்கத் தொலைக காட்சியில் அறிவிக்கப்பட்டது.

கம்யூனிஸ் நாடான வடகொரியாவில் முக்கிய அரசாங்கத் தகவல்கள் தகவல் வெளியிடப்படுவதற்கு மிகுந்த கட்டுப்பாடு உள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி கிம் ஜோங இல் உயிரிழந்த விடயமும் இரு நாட்களின் பின்னரே வெளிவந்துள்ளது.

கிம் ஜோங் இல் வடகொரியாவின் ஸ்தாபகத் தலைவர் கிம் இல் சோங்கின் புதல்வராவார்.

2 ஆம் உலக யுத்தம் முடிவடைந்தபின் சோவியத் யூனியனின் ஆதரவுடன் கொரியாவின் வடபகுதியில் கம்யூனிஸ் வடகொரிய நாட்டை ஸ்தாபித்தவர் கிம் இல் சோங். 1994 ஆம் ஆண்டு அவர் தனது 82 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானதையடுத்து அவரின் மகன் கிம் ஜோங் இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்

# மிகுதி 550 கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் முடிவு

(ஜெருசலேம்)

ஹமாஸ் அமைப்பினருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி 550 பாலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.


பாலஸ்தீனத்தில் செயற்பட்டு வரும் ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் இராணுவத்தின் கொமாண்டர் கிலாட் ஷாலிட்டை 2006இல் பிடித்துச் சென்றனர். இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள பாலஸ்தீனர்களில் 1,027 பேரை விடுவிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுமார் 5 ஆண்டுகளுக்குப்பின் கடந்த ஒக்டோபரில் கிலாட் விடுதலை செய்யப்பட்டார்.

ஹமாஸ் அமைப்பிடம் பிடிபட்டு இஸ்ரேலுக்கு உயிருடன் திரும்பிய ஒரே இராணுவ கொமாண்டர் கிலாட் மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தத்தின் இறுதிக் கட்டமாக 550 பாலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க உள்ளது.

எனினும் விடுவிக்கப்படும் கைதிகளில் ஒருவர் கூட ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாதி அமைப்பினர் இல்லை, யாரையெல்லாம் விடுவிப்பது என்பதை இஸ்ரேல் அரசுதான் தீர்மானித்தது என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காஸா எல்லைப் பகுதியில் வைத்து கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர். இப்போது விடுவிக்கப்படுவோரில் சாலா ஹமூரி குறிப்பிடத்தக்கவர்.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே பல ஆண்டுகளாக பிரச்சினை உள்ளது. இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். பலமுறை அமைதிப் பேச்சு நடத்தியும், இதுவரை நிரந்தரமாக அமைதி திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டுமொரு இரட்டைக் கோபுரம்



அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் காணப்பட்ட இரட்டைக் கோபுரம் தீவிரவாதிக ளால் தகர்க்கப்பட்டது. தற்போது அவ்விடத்திற்கு உயிர்கொடுக்கும் வகையில் மீண்டுமொரு இரட்டைக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. 90க்கும் மேற்பட்ட அடுக்குமாடிகளைக் கொண்டு காணப்படும் இக்கட்டடத்தில் உணவு விடுதி, பூங்கா, நீச்சல் குளம் மற்றும் அனைத்து வசதிகளை கொண்ட கட்டடமாக அமைக்கப்படுகிறது.

மேலும் இக்கட்டடம் எதிர்வரும் 2013ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டும் என்றும் உலகில் மிக உயரமான கோபுரமாக திகழும் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

# சீனாவின் தலையைச் சுற்றி தரை இறங்கின புதிய விமானங்கள்



தாய்வான் விமானப்படை இரு மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை விமானங்கள் அமெரிக்காவிடமிருந்து கிடைத்துள்ளதாக நேற்றுமுன்தினம் தாய்வான் விமானப்படை அறிவித்துள்ளது. தாய்வானிடம் ஏற்கனவே இருந்த விமானங்களைப் பெற்று அவற்றில் கண்காணிப்பு செயற்பாடுகளை மேம்படுத்தும் கருவிகளை அமெரிக்கா பொருத்திக் கொடுத்திருந்தது. புதிய கருவிகள் பொருத்திக் கொடுக்கப்பட்டதால், இராணுவ நடவடிக்கைகளில், இந்த விமானங்களும் புதிய விமானங்களால் செய்யக்கூடிய செயற்பாடுகள் அனைத்தையும் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விமானங்களை வைத்து தாய்வானால் தென்சீனக் கடலில் இலகுவாக கண்காணிப்புக்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரியவருகின்றது.

ஏற்கனவே இதே ரகத்திலான இரு விமானங்கள் தாய்வான் விமானப்படையிடம் இருந்தன. இப்போது E-2K விமானங்களின் எண்ணிக்கை 4 ஆகும்.

இந்த 4 விமானங்களுமே தாய்வானுக்கு அமெரிக்காவால் கொடுக்கப்பட்டவைதான். முதல் இரு விமானங்களும் 1995இல் சீனாவின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வழங்கப்பட்டன. 10 வருடங்களின்பின், அவற்றின் தொழில்நுட்பங்களில் அமெரிக்கா நிறையவே மாற்றங்களை செய்துவிட்ட நிலையில், 2006இல் மேலும் இரு விமானங்களை அமெரிக்கா தாய்வான் · விமானப்படைக்கு வழங்கியது.

ஆனால், 1995இல் பெறப்பட்ட விமானங்களின் செயற்பாடு காலம்கடந்த நிலையில் எந்த விதத்திலும் பயன்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2009 இல் தாய்வான் புதிய விமானங்களைக் கோரியது. ஆனால், சீனாவிடமிருந்து மிகக் கடுமையான எதிர்ப்பு வந்தது. அதனால், தாய்வானின் புதிய விமானக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க அமெரிக்கா விரும்பவில்லை.

ஆனால், தாய்வானுக்கு ஒரு உறுதிமொழி கொடுத்தது. -அரசியல் காரணங்களுக்காக உங்களுக்கு புதிய விமானங்களை வழங்க முடியாதுள்ளது. ஆனால், உங்களிடமுள்ள இரு பழைய விமானங்களை முழுமையாக மேம்படுத்தி புத்தம் புதிய விமானம்போல மாற்றிக் கொடுக்கிறோம். என்பதே அந்த உறுதிமொழி. இந்த ஒப்புதலின் படி தாய்வானிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரு விமானங்கள்தான் தற்போது புத்தம்புதிய விமானங்கள்போல திரும்பி வந்துள்ளன. இதை சீனாவால் எதிர்க்க முடியவில்லை. ஏனெனில் இவை புதிய விற்பனை அல்ல.

# பதிவிறக்கப் பெட்டகம்

நான் பார்த்த எந்தச் சினிமாவிலும் தமிழ் வாழ்க்கை இதுவரைக்கும் காண்பிக்கப்படவில்லை என்பது தமிழ் சினிமாவின் மாபெரும் குறை. ஒரு மாதிரி நடுத்தரமான அல்லது பெரிய, கலை என்கிற உரிமை பாராட்டுதல் இல்லாத மலையாளப் படங்கள் எல்லாவற்றிலுமே அடிப்படையான சில விஷயங்கள் இருக்கும். அவனுடைய வீடு எங்க இருக்கு, எந்த நிலத்தில் நிகழுது, அவன் என்ன மொழி பேசுறான், அவனுடைய தொழில் என்ன என்கிற எல்லாமே இருக்கும். தமிழ் சினிமாவில் இதெல்லாம் வருவதே இல்லை. இதெல்லாம் ஒரு கலையின் அடிப்படை விஷயங்கள். கண்முன் காட்டி நம்ப வைக்கிற காட்சிக் கலைக்கு இதெல்லாம் அவசியம் தேவை. இதைப் பற்றிய பொதுஅறிவுகூடப் பார்வையாளனுக்கு வழங்கப்படவேயில்லை. அப்படியான ஒரு அறிவு அவனுக்கு வந்திருக்குமானால் இப்படியான படங்கள் ஓடியிருக்காது. இப்ப கொஞ்சம் கேள்விகள் கேட்கிற சூழல் வருது. எங்க நடக்குது, ஏன் நடக்குது, எந்தச் சாதிக்காரன், என்ன தொழில் செய்யறான், இவன் வயசு என்ன, நிறம் என்ன இத்தனை கேள்விகளும் இருக்கு. ஒரு நாவல் எழுதும்போது இத்தனை கேள்விகளுக்கும் ஒரு நாவலாசிரியன் பதில் சொல்றானே. இரண்டரை மணி நேரம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்க்கிற ஒரு படத்துக்கு அந்த நியாயமே கொடுக்கப்படல என்பது ஜனநாயகக் கலையின் ஜனநாயக விரோதப் போக்குதான்.

– சுகுமாரன்

சமகாலத் தமிழ் சினிமாவை எடுத்துக் கொண்டால், யதார்த்தமான கதைகளைக் கொண்ட சுப்ரமணியபுரம் போன்ற படங்களை மக்கள் இன்று கொண்டாடுகிறார்கள். ஆனால் சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்து, பிரபல இயக்குனர் பி.வாசு இயக்கி வெளிவந்துள்ள 'குசேலன்' படம் தோல்வி. இதற்குக் காரணமும் ரஜினியின் கோழைத்தனம்தான். குசேலனின் மலையாள ஒரிஜினல் 'கத பறயும் போள்' படத்தில் வரும் மம்முட்டி கடைசியில் அரை மணி நேரமே வருவார். உண்மையில் கதையின் ஹீரோ முடி திருத்துபவர் தான். எவ்வளவு பெரிய சூப்பர் ஸ்டாராக இருந்தாலும் அவனும் ஒரு சாதாரண மனிதன்தான் அவனிடம் எந்தவித ஒளி வட்டமும் இல்லை என்பதே அந்த அருமையான மலையாளப் படத்தின் கதை. மலையாளத்தில் அது ஒரு சூப்பர் ஹிட். ஆனால் இங்கே ரஜினியால் அரை மணி நேரத்துக்கு மட்டுமே வரும் படத்தில் நடிக்க முடியாதே? அதனால் அவருக்கென்று கதையில் நிறைய ஒட்டுப் போட்டு படம் பூராவும் ரஜினி வருமாறு செய்தார்கள். கதையின் அடிப்படையையே குலைத்து விட்டதால் படம் ஊற்றிக் கொண்டது.

எனவே இனி ரஜினி செய்ய வேண்டியது இரண்டே விஷயங்கள் தான். ஏ.ஆர். ரஹ்மான் பாணியில் பத்திரிகைகாரர்கள் என்ன கேட்டாலும் – அடுத்த தேர்தலில் உங்கள் ஒட்டு யாருக்கு என்று கேட்டால் கூட– 'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்று பதில் சொல்ல வேண்டும். அடுத்து, தான் ஒரு சூப்பர் ஸ்டார் என்பதையே 24 மணி நேரமும் நினைத்துக் கொண்டிருக்காமல், சுப்ரமணியபுரம் சசிகுமார் போன்றவர்களின் படங்களிலும் ஒரு சாதாரண நடிகனாகப் பணியாற்ற வேண்டும். இதைச் செய்யாவிட்டால் சூப்பர் ஸ்டார் பதவியை அவரால் தக்க வைத்துக் கொள்வது கடினம்.

– சாரு நிவேதிதா

ஆக்ஷன் படம் என்பதை மிக மிகத் தவறாகப் புரிந்துகொண்ட ஒரே இடம் தமிழ் சினிமாதான் என்று தோன்றுகிறது. 'தவமாய் தவமிருந்து' படத்தைக் கிண்டலடித்த மீடியாக்கள், பேரரசு 'திருப்பாச்சி'யில் ஒரு சென்னையைக் காட்டிய போது நாம் இந்த ஊரில்தான் இருக்கிறோமா, தமிழ் சினிமா வரலாற்றில் அபத்தமான சகிக்க முடியாத படங்களைத் தருகிற பேரரசு மேல் எந்தக் கேள்வியையும் எழுப்பாமல் விட்டுவிட்டன.

இந்த தாதாக்களாக வருகிறஹீரோக்கள்.... இவர்கள் படத்தில் தாதாக்கள் இல்லை.ஹீரோ தாதாக்கள். அவ்வளவுதான். படத்தில தாதாவாக வருகிற இவர்கள் ரயிலைக் கவிழ்க்க மாட்டார்கள். இராத்திரி பகல் கற்பழிப்புக் கிடையாது. விலைமாதாக ஒரு வசீகரமான அழகி உண்டு. பொதுமக்களை வெட்டுவதில்லை. இப்படி பல 'இல்லை'களுடன் இருப்பார்கள். ஆபத்துக்குப் பாவம் இல்லை என்பது போல அடிக்கடி கஞ்சா மட்டும் கடத்துவார்கள். படத்தில் பாதிப் பேரை குடும்பத்தோடு காலி செய்ததற்கு நியாயமான காரணம் இருக்கும். இதற்கு எதிராக எதிர் எதிர் தாதா இருப்பான். ஒரு பணக்கார மிக அழகிய யுவதி காதலியாக வந்துஹீரோ தாதா வெறுக்க வெறுக்க காதல் செய்வாள். பாஸ் அப்பா அந்தக் காதலை பெயிலாக்கப் பாடுபடுவார். அம்மா நகம் வெட்டிக் கொண்டால் கூட, ஹீரோ தாதாவுக்கு அழுகை வந்துவிடும். ஆனால் இவர், படத்தில் பல தலைகளை க்ளோஸப்பில் வெட்டிக்கொண்டே இருப்பார். வாழ்க்கையையே வெறுக்க வைக்கும் இந்த மாதிரி தமிழ்ப் படங்கள் தற்சமயம் மிக அதிகமாக வெளிவந்து கொண்டிருப்பதற்குக் காரணம் மிக மிகத் தெளிவாகஹீரோக்கள்தான். இந்த ஹீரோக்கள்ராஜா போல வாழ்வதற்கு லட்சக்கணக்கான சிறிய குடும்பங்கள் தம் பணத்தைச் செலவழிக்கின்றன. பொழுதுபோக்கு என்ற ஒரே பெயரைச் சொல்லி அவர்கள் வயிற்றில் அடிக்கலாம். ஆனால் அவர்கள் மூளையில் அடிப்பது என்ன நியாயம்?

– பரசுராம்

# அரசியல் துணிச்சல் அற்ற, வெறும் வாய்ச்சொல் வீரர்கள் எமது மக்களுக்கு தீர்வெதையும் பெற்றுத் தரப்போவதில்லை



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வரவு செலவுத் திட்டஉரை - 2012

(நேற்றைய தொடர்ச்சி)

கௌரவ சபாநாயகர் அவர்களே!....

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றுகின்ற தொலைநோக்கினை மையமாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனை தொலைநோக்கிற்கு அமைவாக, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சானது, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் ஊடாக, கிராமியப் பொருளாதார செயற்பாடுகளை மேம்படுத்தி கிராமிய மக்களது வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றது.

எனது அமைச்சானது மகிந்த சிந்தனையின் பின்வரும இலக்குகளை அடைவதற்கான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

☐ ஆண்டு தோறும் 5,000 சிறு தொழில் முயற்சிகளை நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளாக தரம் உயர்த்துதல்

☐ ஆண்டு தோறும் 200 நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை பாரிய அளவிலான தொழில் முயற்சிகளாக தரம் உயர்த்துதல்

☐ 81,000 குடிசைக் கைத்தொழில் சார்ந்த மனைப பொருளாதார அலகுகளை ஸ்தாபித்து கிராமிய பொருளாதாரத்திற்கு உந்துசக்தியாக அமைதல்.

☐ தேசிய கைப்பணியாளர்களைப் பாதுகாப்பதற்காக கைவினைக் கைப்பணிக் கிராமங்களை ஸ்தாபித்தல்

☐ தேசிய கைப்பணியாளர்களுக்கான தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல்

☐ பனை மற்றும் கித்துள் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்

☐ ஆனையிறவு உப்பளத்தை மீள இயங்க வைப்பதன் ஊடாக உப்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்

☐ கடற்றொழிலாளர் சமூகத்தின் பருவகாலத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தரமான மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல்

இலங்கையின் தொழில் முயற்சிகளில் 80%-90% சதவீதமானவை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளாகும். மகிந்த சிந்தனை எதிர்காலத் தொலைநோக்கானது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில முயற்சிகளை பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதுகின்றது.

### அபிவிருத்தி உபாயங்கள்

பாரம்பரிய கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சிகளைப் பலப்படுத்தும் பொருட்டு பின்வரும் அபிவிருத்தி உபாயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

☐ புதிய மற்றும் மிகப் பொருத்தமான தொழில்நுட்பத்தை கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் கைப்பணித் துறைக்கு வழங்குதல்.

☐ உற்பத்தியாளர்கள் மத்தியில் போட்டி ரீதியிலான அனுகூலங்களைப் பெறும் பொருட்டு தொழில்முயற்சி, முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான திறன்களைப் பரிமாற்றுதல்.

☐ சந்தையில் போட்டியிடக்கூடிய வகையில் சந்தை நோக்கிய புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி அவர்களை வலுவூட்டல்.

☐ பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கண்காட்சிகளையும் வர்த்தக சந்தைகளையும் கொள்வனவாளர் - விற்பனையாளர் சந்திப்புகளையும் ஏற்பாடு செய்வதன் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கல்.

☐ உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு இயந்திர மற்றும் ஏனைய வசதிகளை வழங்கல்.

☐ தேசிய மட்டத்தில் ஆக்கத்திறன்களையும் திறமைகளையும் மதிப்பீடு செய்து விருது வழங்கல், பாராட்டுதல், கௌரவித்தல், அவர்களது ஆர்வத்தை நிலைபெறச் செய்தல். (தேசிய மற்றும் உப தேசிய விருது வழங்கும வைபவங்களில் திறமைச் சான்றிதழ்கள், பணப் பரிசுகள் விருதுகள் வழங்கல்)

☐ சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை மேம்படுத்தும் பொருட்டு முனைப்புடனான தனியார்துறைப் பங்களிப்பின உதவியோடு பெறுமதி சேர்க்கப்பட்ட கைப்பணி சார்ந்த பாரம்பரிய கிராமியக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.

☐ கடன் வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

☐ சிறு கைத்தொழில்களுக்கு உதவும் பொருட்டு கிராமிய மட்டத்தில் விரிவாக்கல் சேவைகளை (கடன் வசதிகளுக்கான கருத்திட்ட அறிக்கைகள், சாத்தியக்கூற்று அறிக்கைகளுக்கு உதவியளித்தல், கடன் வசதிகள், தொழில்நுட்பத் தகவல், மதியுரைச் சேவைகள், ஆய்வுகூடச் சேவைகள், தரச் சேவைகள், நடமாடும் பயிற்சியளிப்புகள் ஆகியன.) மற்றும் பொதுச் சேவை நிலையங்களை வழங்கல்.

எனது அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் மகிந்த சிந்தனை இலக்குகளை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றன.

☐ தேசிய அருங்கலைகள் பேரவை

☐ தேசிய வடிவமைப்பு நிலையம்

☐ கைத்தொழில் அபிவிருத்திச் சபை

☐ பனை அபிவிருத்திச் சபை

☐ வடகடல் நிறுவனம்

☐ ஆனையிறவு உப்பளம்

'வாழ்வு எழுச்சி' (திவி நெகும) மனைப் பொருளாதார தேசிய நிகழ்ச்சித் திட்டம்

எனது அமைச்சானது கொத்தணி அணுகுமுறையைப் பயன்படுத்தி ஏனைய கைத்தொழில் சார்ந்த அமைச்சுக்களான கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வணிக அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சு, அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகள் மற்றும் அவற்றின் கீழ் வருகின்ற நிறுவனங்களுடன் இணைந்து இந்நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இது 14 நிறுவனங்களுடன் இணைந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடன் அனைத்து மாவட்டங்களிலும் நாடளாவிய ரீதியில் குடிசைக் கைத்தொழில் தொடர்பிலான 'வாழ்வு எழுச்சி' (திவி நெகும) தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதில் பிரதானமான பங்கை வகிக்கின்றது.

இந்த உபாயமானது பின்வரும் ஐந்து படிமுறைகளைக் கொண்ட அணுகுமுறையாகக் காணப்படுகின்றது.

தொழில்நுட்பக் காட்சிப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான மாதிரி கண்காட்சி கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கியவாறு ஹோமாகமயில் நடாத்தப்பட்டது. இப்பரீட்சார்த்த அனுபவத்தின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்ற வகையில நாடளாவிய நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

i. தொழில்நுட்பக் காட்சிப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் -கிராம மக்கள் பொருத்தமான குடிசைக் கைத்தொழிலைத் தெரிவு செய்வதற்கு உதவுகின்ற வகையிலான மாவட்ட மட்டத்திலான கண்காட்சிகள்

ii. இடையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்கும் பொருட்டும் பயனாளிகளின் தேவை மதிப்பீட்டைப் பெறும் பொருட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தல்

iii. பயனாளிகளுக்கு பயிற்சியளித்தல், தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் தொழில்முயற்சித் திறன்களை வழங்கல்

iv. பயனாளிகளுக்கு (ரூபா 10,000/- பெறுமதியான) அடிப்படைக் கருவிகள் மற்றும் மூலப்பொருட்களை முழுமையாக, நன்கொடையாக வழங்குதல்.

v. சலுகைக் கடன்களைப் பெறுவதற்கு உதவும் முகமாக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தலும், மனைப் பொருளாதார கைத்தொழில் அலகுகளின் நிலைத்திருத்தலை மேம்படுத்தும் பொருட்டு தனியார்துறை மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் ஈடுபாட்டுடன் உப ஒப்பந்த ஏற்பாடுகள் மற்றும் மீள் கொள்வனவு ஏற்பாடுகளின் ஊடாக சந்தைத் தொடர்பூட்டல்களை வழங்கல்.

☐ 2011 ஆம் ஆண்டில் கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், கேகாலை, கம்பஹா, கண்டி, களுத்துறை, இரத்தினபுரி, மன்னார், மொனராகலை, அம்பாந்தோட்டை, புத்தளம், பதுளை ஆகிய 13 மாவட்டங்களில் தொழில்நுட்பக் காட்சிப்படுத்தல் கண்காட்சியை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்கள் 2012 இல் உள்ளடக்கப்படும்.

☐ 10 மாவட்டங்களில் முன்னேற்பாட்டுக் கூட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

☐ கொழும்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், கேகாலை, கம்பஹா, மொனராகலை, புத்தளம் ஆகிய 7 மாவட்டங்களிலும் கண்காட்சிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

☐ கொழும்பு மாவட்டத்தில் 4435 நபர்களும், அநுராதபுரத்தில் 2810 நபர்களும், யாழ்ப்பாணத்தில் 4500 நபர்களும், கேகாலையில் 8650 நபர்களும், கம்பஹாவில் 4750 நபர்களும், மொனராகலையில் 800 நபர்களும் இக் கண்காட்சியை பார்வையிட்டு, குடிசைக் கைத்தொழில் முயற்சிகளைத் தெரிவுசெய்து தங்களது அக்கறைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

☐ இவ் 7 மாவட்டங்களிலும் தேவை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் தொழில்நுட்பப் பரிமாற்றமும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

☐ மத்திய வங்கியுடன் இணைந்து அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் குடிசைக் கைத்தொழில்களுக்கான கடன் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகிந்த சிந்தனை தொலை நோக்கிற்கு அமைவாக குடிசைக் கைத்தொழில் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கி. கிராம மக்களின் வாழ்வாதாரத்துக்கு பங்களிப்பு செய்து, ஒரு வளமான இல்லத்தை ஏற்படுத்தி, செழிப்பான தாயகத்தை கட்டி எழுப்பி, இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றுகின்ற மகிந்த சிந்தனை இலக்கிற்கு பங்களிப்பு செய்கின்ற இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பங்காளியாக இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை தொழில் முயற்சியாண்மை கலாசாரத்தை விரிவாக்கி வளர்க்கும் ஒரு திட்டமாக நான் நோக்குகின்றேன். இந்த பயனுள்ள அபிவிருத்திப் பாதையானது நிலைத்து நிற்கக்கூடிய ஒரு வளமான இல்லத்தைக் கட்டியெழுப்ப வசதி செய்வதுடன் ஓர் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடுவதாகவும் அமையும்.

### அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீளக் கட்டியெழுப்புதல்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையானது யாழ்ப்பாணத்தின் அச்சுவேலி பிரதேசத்தில் 65 ஏக்கர் காணியில் 1970 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதோடு, கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்டது. இதில் 36 கைத்தொழில் அலகுகள் 25 ஏக்கர் காணியில் இயங்கிவந்தன. இக் கைத்தொழில் பேட்டை கடந்த போர்ச் சூழ்நிலையின் காரணமாக அழிக்கப்பட்டது. இக கைத்தொழில் பேட்டையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்திய சிறு நன்கொடை அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 174 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி உதவி பெறப்பட்டது. இலங்கை அரசாங்கம் 25 மில்லியன் ரூபாவை வழங்கியது.

☐ நிலக்கண்ணி அகற்றல் மற்றும் காணியைத் துப்புரவு செய்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, நிர்வாகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண் பரிசோதனை, நீர் தரப் பரிசோதனை மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

☐ இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தால் இந்திய நன்கொடையினால் நிதிப்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் கருத்திட்ட முகாமைத்துவ அலுவலக சேவை (UNOPS) பெறப்பட்டதோடு, இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தால் டிசம்பர் 9ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

☐ கேள்வி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இங்கு முதலீடு செய்வதற்கு பழைய மற்றும் புதிய கைத்தொழிலாளர்கள் 48 பேர் ஆர்வம் தெரிவித்துள்ளனர். உணவு பதனிடல், மர வேலைப்பாடுகள், மென்ரக பொறியியல், கனிய நீர், துருப்பிடிக்காத உருக்கு மற்றும் அலுமினியம் ஆகியவற்றை இத்துறைகள் உள்ளடக்கியுள்ளன. அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் ஊடாக நேரடியாகவும் நேரடியற்ற விதத்திலும் அண்ணளவாக 4,000 - 5,000 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்படலாம்.

### பனை ஆராய்ச்சி நிறுவனத்தை மீளக் கட்டியெழுப்புதல்

1986 இல் யாழ்ப்பாணம் கைதடியில் ஸ்தாபிக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிறுவனம், பனை அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கியது. பனை சார்ந்த துறையில் பல ஆராய்ச்சி முன்னெடுப்புகளை இந்த ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டதோடு, அப்போது நிலவிய போர்ச் சூழ்நிலையின் காரணமாக 1995 இல் இதன் செயற்பாடுகள் கைவிடப்பட்டன. சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து குறிப்பாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் பனை சார்ந்த துறை ஊக்கம் மிக்க துறையாக மீளத்தோன்ற ஆரம்பித்துள்ளமையால் இதனை மீள ஸ்தாபிக்கும் தேவை அவசியமானது என உணரப்பட்டது.

☐ பனை ஆராய்ச்சி நிறுவனத்தை மீள ஸ்தாபிப்பதற்கு இந்திய அரசின் சிறு நன்கொடை அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 70 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி உதவிகள் பெறப்பட்டன. இது ஆய்வுகூடக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

☐ இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட நிதியத்தின் கீழ் கட்டடங்களின் புதுப்பித்தல்கள், புனரமைப்புகள் மற்றும் சிவில் வேலைகள் 2011 ஜுலை மாதத்தில ஆரம்பிக்கப்பட்டன. மேலும், ஆராய்ச்சி வசதிகளுக்கான நிலையமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. கட்டிட வேலைகள் யாவும் பெப்ரவரி மாதத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகள் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும்.

☐ பயன்பாடுகளை அடைவதற்காக பனை சார்ந்த துறையின் அபிவிருத்திக்கான முழுமையானதொரு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையை உள்ளடக்குகின்றவாறு இத் துறையை ஊக்கம்மிக்க பொருளாதாரத் துறையாக மாற்றும் பொருட்டு பனை சார்ந்த உற்பத்திகளை (பனம் பானம் மற்றும் பனங்கட்டி) பழுதடையாது பாதுகாப்பதற்கான தொழில்நுட்பங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல், புதிய உற்பத்திகள் (வினாகிரி, கட்டைக் கரி, மென்பானங்கள், பனங்களி), பனை சார்ந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், உற்பத்தித்திறனை மேம்படுத்தல் (மரமேறும் கருவி, பனம்பழம் பிழியும் கருவி), பனை வளங்களிலிருந்து உச்சமட்டப் பயனைப் பெறுதல் ஆகியவற்றை அறிமுகப்படுத்தல் ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

(மிகுதி நாளைய தினமுரசில்)

# வடக்கின் அரச ஊழியர்களுக்கு குறுகியகால சிங்கள மொழிப்பயிற்சி



(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் யாழ்ப்பாணத்திலுள்ள 80 அரச ஊழியர்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பயிற்சி பணிமனையில் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் டிசம்பர் 24 ஆம் திகதி வரை 10 மணித்தியாலங்கள் கொண்ட 10 நாள் சிங்கள பயிற்சிநெறி நடத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்ப நிகழ்வுகள் 14 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் தலைமையில் நடத்தப்பட்டது.

பிரதம செயலாளர் திருமதி. ர.விஜயலக்சுமி நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செம்மையாக அமுலாக்குவதற்கு யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றவர்களது தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது. இவ்வாறான பயிற்சி நெறிகள் மூலம் இக்குறைபாடுகளை நிவர்த்திசெய்ய முடியுமென்று கருத்து தெரிவித்தார்.

மேலும் மத்திய அரசிலிருந்து வரும் கடிதங்கள் அதிகளவில் சிங்கள மொழியிலேயே காணப்படுகின்றன. அக்கடிதங்களை மொழிபெயர்ப்பு செய்வதற்கு வட மாகாண அலுவலகங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர். அத்துடன் உரை பெயர்ப்பாளர்களும் குறைந்தளவிலேயே இருக்கின்றனர். எனவே தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மொழிபெயர்ப்பாளர்களுக்கும் உரைபெயர்ப்பாளர்களுக்கும் பயிற்சியளித்தால் அலுவலகங்களில் வேலைகளை மிகவும் இலகுவாக்க முடியமெனவும் தெரிவித்தார்.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஆர் ஹேரத்துடன் வருகைதந்த வளவாளர்களும் பயிற்சியை நடத்தி வருகின்றனர்.

## இணக்கமின்றி...

தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியதுடன் இதற்காக இந்திய மா நிலங்கள் மற்றும் ஏனைய நாடுகளின் காணி அதிகாரங்களை பற்றி அரசாங்கத் தரப்பினருக்கு சுட்டிக்காட்டியதாக அவர் தெரிவித்தார்.

எனினும், அரசாங்கத்தரப்பு காணி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் வசமே இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததாகத் தெரிவித்தார்.

எனவே, நேற்றைய பேச்சுவார்த்தையில் எவ்வித ஆக்கபூர்வமான கருத்துக்களும் பரிமாறப்படவில்லை என தெரிவித்துள்ளார். இந்நிலையில், இன்று இடம்பெறும் சந்திப்பின்போது அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் சுரேஷ் பிரேமச் சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முனவைத்த தீர்வுப்பொதி, மங்கள முனசிங்க நாடாளுமன்றக்குழுவின் பரிந்துரை மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் ஆணைக்குழு ஆகியவையும் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங் கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி நிற்பதாக சுரேஷ் பிரேமச் சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஐ.தே.க.கட்சியின்...

பதவிக்குப் போட்டியிட்ட கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய 24 வாக்குகளைப் பெற்றுதோல்வியடைந்தார். இதேவேளை கட்சியின் தலைமைப் பதவிக்கு நீண்டகாலமாக முயன்று வருபவரும் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர் அணியைச் சேர்ந்தவருமான சஜித் பிரேமதாச கட்சியின் பிரதித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவரை எதிர்த்து பிரதித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட ரவி கருணாநாயக்காவை 8 வாக்குகள் வித்தியாசத்தில் இவர் தோற்கடித்தார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தயா கமகே தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவிக்கான போட்டியில் தயாசிறி ஜயசேகர மற்றும் தயாகமகே ஆகியோர் போட்டியிட்ட நிலையில் தயா கமகேவுக்கு 56 வாக்குகளும் தயாசிறி ஜயசேகரவுக்கு 36 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

இதனிடையே, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்திற்கு சிலர் கல்லெறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். கல்வீச்சு காரணமாக, எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனம் உட்பட பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

இதேவேளை, நேற்று மாலை ஐக்கிய தேசியக் கட்சியின் காரியாலயத்திற்கு முன்னால், ஏற்பட்ட அமைதியற்ற சூழ்நிலைக்கு காரணமானவர் என சந்தேகிக்கப்படும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக்க அபயசிங்க மற்றும் மேல் மாகாணசபை ரோஸ் பர்ணாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமைகளை இரத்து செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இன்றைய குழப்பநிலை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஏனைய கட்சி உறுப்பினர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். கட்சியின் தலைவர் என்ற முறையில் சிறிகொத்த கட்சி தலைமையகத்தை பாதுகாப்பது தமது பொறுப்பென அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக குழப்ப நிலையுடன் தொடர்புடைய அனைத்து உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## தமிழ்த் தேசிய...

இனியும் பொறுத்திராது பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் அறிக்கையினை நிராகரிக்கவேண்டும். அவர்கள் இவ்விடயத்தினில் விரைந்து தமது கட்சியின் பொது நிலைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டும்.

சர்வதேசம் இனப்படுகொலை தொடர்பிலான விசாரணையை பொறுப்பேற்கவேண்டும். ஆனால் அது போர் நடந்த இறுதி மூன்று வருடங்களாக மட்டும் இருக்கக்கூடாது. பிரிட்டிஸார் இலங்கையிலிருந்து விலகிய காலம் முதல் தமிழ் மக்களுக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலைகள் அனைத்தும் விசாரிக்கப்பட வேண்டும்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் முன்வைத்த பத்து அம்சகோரிக்கைகள் வரவேற்கத்தக்கவை. ஆனால் கூட்டமைப்பினை திருத்தலாமென்ற தமிழ் சிவில் சமூக அமைப்புக்களது கனவு எப்போதுமே நிறைவேறாது.

சிலவேளைகளில் அக்கனவு நிறைவேறினால் மகிழ்ச்சியடைபவர்களில் முதல் ஆளாக நானே இருப்பேன். இதேவேளை தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் பின்னணியில் தாங்களே இருப்பதாக கூட்டமைப்பை சேர்ந்த சிலர் கூறுகின்றனரே என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் கூட்டமைப்பினருக்கு சொல்லப்படுபவனவற்றை விட்டுவிட்டு நொண்டிச்சாட்டு தேடுவதே இப்போது பழக்கமாகிப் போய்விட்டது.

எனினும் புத்திஜீவிகளையும் பொது அமைப்புக்களையும் சேர்ந்த தமிழ் சிவில் சமூக அமைப்பு பெயரளவில்கூட என் பின்னால் இருப்பதாக கூறுவது கூட அவர்களை அவமானப்படுத்துவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளது. உண்மையில் அவர்கள் எம்பின்னால் இருந்தால் மட்டற்ற மகிழ்ச்சியடைவேன் எனவும் தெரிவித்தார். இம்மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தொடரும் அடைமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட மணியந்தோட்டம், உதயபுரம் மக்களுக்குத் தற்போது நிவாரணம் வழங்கப்பட்டுவருவதாக ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித தலைவருமான அ.இரவீந்திரதாசன் தெரிவித்தார். நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அண்மையில் பூம்புகாரில் திறந்துவைக்கப்பட்ட கிளை விற்பனை நிலையம் ஊடாக நிவாரண விநியோகம் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அப்பிரதேச மக்களையும் இடங்களையும் அவர் சென்று பார்வையிட்டுள்ளார்.

## இந்திய இழுவைப்படகுகளின்...

காலநிலை காரணமாக, இந்திய இழுவைப் படகுகளினால் சேதமாக்கப்பட்ட வலைகளைக்கூட எடுக்கமுடியாமல் தாம் கரை திரும்ப நேரிட்டதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். சுமார் 15 வரையான மீனவர்களது வலைகள் அறுக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டுமுள்ளன. இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல், மீன்பிடி வலைகள் சேதமாக கப்பட்டமை தொடர்பாக யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் மாதகல் மீனவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## எட்டுவயதுச் சிறுமி...

கொலைசெய்து விடுவோம் என மிரட்டியதாகவும் மயக்கம் தெளிந்த சிறுமி தாயாரிடம் தெரிவித்துள்ளார். குறித்த பகுதியில் 5 வீட்டிற்குள் ஒரே நேரத்தில் திருடர்கள் சென்றதாகவும், குறித்த வீட்டில் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

## காணாமற்போன...

இவருடன் பயணம் செய்த மற்றைய மீனவா கரையோரம் நின்ற மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். மேலும் இச்சம்பவம் கடற்கரையில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் நடைபெற்றுள்ளதுடன், தேசமடைந்த படகும் மீட்கப்பட்டுள்ளது. காணாமல்போன மீனவரைத் தேடும் பணி தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. (04)

## வடக்கில் தொடரும்...

வெள்ளப்பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளன. பூநகரிப் பகுதியிலுள்ள தியாகன் குளம் நீர்த்தேக்கம் அதிகரித்தகாரணத்தால் பூநகரி முட்கொம்பன் கிராமத்திற்கான போக்குவரத்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜெயபுரம் வீதியிலுள்ள காரியன்பிட்டி குளத்தின் துருசுப் பகுதி உடைப்பெடுத்துள்ளதனால் அப்பகுதியில் முப்பது ஏக்கர் வரையான நெற்செய்கை அழிவடைந்துள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் மூங்கிலாறு, நெத்தலியாறு, வெள்ளப்பள்ளம், குரவயல், தேவிபுரம் அ,ஆ பகுதிகள் வெள்ளக்காடாக உள்ளன. இங்கு 1250 வரையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.


பரந்தன் முல்லை பிரதான வீதியை ஊடறுத்து நான்கு இடங்களில் வெள்ளம் பாய்வதனால் போக்குவரத்துச் செய்வதில் பாரிய சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகிறது.

மாந்தை கிழக்கில் நட்டாங்கண்டல் பகுதியிலுள்ள சிறிய கிராமமொன்று வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதனால் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக்குளத்திற்குச் செக்கனுக்கு 8550கன அடி நீர் வந்தவண்ணமுள்ளது. இதனால் பத்து வான்கதவுகள் திறக்கப்பட்ட போதிலும், 5540 கன அடி தண்ணீரையே வெளியேற்றக் கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்து செல்கின்றது. அத்துடன் அக்கராயன், கல்மடு, கரியாலை நாகபடுவான், புதுமுறிப்பு, வன்னேரி, கனகாம்பிகைக் குளங்கள் வான் பாய்ந்த வண்ணமுள்ளன.

முல்லைத்தீவில் முத்தையன் கட்டுக்குளம் வான்பாய்வதுடன், அதனது இரண்டு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் பேராறு பகுதியில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தண்ணிமுறிப்பு, உடையார்கட்டு, மடவாளசிங்கன், விசுவமடு, கறுக்கன்கேணி ஆகிய குளங்களும் வான் பாய்கின்றன.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள 12 குளங்கள் வான் பாய்கின்றன. கண்டாவளைப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப் பட்டுள்ள மக்களுக்கு நாமல் எம்.பியின் ஆலோசனைக்கு அமைய அனர்த்த முகாமைத்துவ நிதியிலிருந்து பிரதேச செயலர் சத்தியசீலன் ஊடாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (கே,138)



# சோலை வரியை அதிகரிக்கும் தீர்மானம் வரன்முறைக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டது

## தெளிவுபடுத்துகிறார் யாழ்.மாநகர முதல்வர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சோலை வரியை ஐம்பது சத விகிதத்தால் உயர்த்தியமை தொடர்பான தீர்மானம் குறித்து யாழ்.மாநகர சபை முதல்வர் விளக்கமளித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற வரவுசெலவுத் திட்ட ஆலோசனைக் கூட்டத்தின் போது கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியால் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கும் போதே மாநகர முதல்வர் மேற்படி விளக்கத்தை வழங்கியதாக முதல்வர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி சம்பந்தமான அனைத்து விடயங்களும் பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவ்வாறே சோலைவரியை 50 வீதமாக அதிகரிப்பதற்கான அங்கீகாரமும் நிதிக்குழு மற்றும் மாதாந்தக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டு அதன் பின்னரே முடிவு செய்யப்பட்டது.

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தில் 10 ஆவது விடயமாக 10.12.2010 நடைபெற்ற வரவு செலவுத்திட்ட மதிப்பீடு சார்பான கலந்துரையாடலின் போது தற்போதுள்ள ஆண் டுப் பெறுமதியில் இருந்து அற விடப்படும் ஆண்டு வரியை 50 வீதத்தால் உயர்த்தி 2011 ஆம் ஆண்டிற்கு அறவிடப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கடந்த 23.12.2010 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் சோலைவரியை 50 வீதமாக அதிகரிப்பதற்கான அனுமதியை சபை ஏகோபித்து வழங்கியிருந்தது.

அத்துடன், 30.12.2010 ஆம் திகதி நடைபெற்ற சபையின் 15 ஆவது மாதாந்தக் கூட்டத்தின் அறிக்கையின் 19 ஆவது விடயமாக ஆராயப்பட்டது.

2011 ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து சபையின் சோலை வரியை 50 வீதத்தாலும் சொந்தக் கடைகளின் வாடகையை இரண்டு மடங்காகவும் அதிகரிக்க இச்சபை தீர்மானிக்கிறது என்ற பிரேரணை உறுப்பினர் அ.ம.மங்களநேசன் முன்மொழிய உறுப்பினர் சு.விஜயகாந்த் வழிமொழிந்தார். பிரேரணையை சபை அப்போது ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இவ்வாறு அறிக்கைகளில் இருந்து ஆதாரங்கள் காட்டி ஆணையாளர் மேலும் விளக்கமளித்தார். இதன்போது உறுப்பினர் அ.பரஞ்சோதி ஒன்றும் செய்ய முடியாமல் வெட்கித் தலை குனிந்தார்.

எமது சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானம் 524, 611,500.00 ரூபாவாக அதிகரிக்கப்பட்ட நிலையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு அதிகரித்துள்ளது. ஒரு காலத்திலும் அடைய முடியாத இலக்கினை சபை அடைந்துள்ளபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு உறுப்பினர் மாத்திரம் மக்கள் சார்ந்த இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தமை யாழ்.மாநகர மக்களுக்கு கிடைக்க இருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை தடுக்கவா? என்ற ஐயம் தோன்றுகின்றது.

இதனை நன்கு உணர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அ.மேரியம்மா கருத்துத் தெரிவிக்கையில், தமது கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி அவர்களால் கூறப்பட்ட விடயங்களுக்கு ஆணையாளரால் சரியான விளக்கம் கொடுக்கப்பட்டது. இதனைக் கடந்த ஆண்டு ஏற்றுக் கொண்டு நடைமுறைக்கு வந்த பின்னர் ஒரு வருட காலத்தின் பின் இப்பொழுது குறை கூறுகின்றார். சோலை வரியை அதிகரிப்பதற்கான பிரேரணை சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆணையாளரின் விளக்கம் சரி என்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் இக் கருத்தை பிழையாக விளங்கிக் கொண்டதற்கு தாம் கட்சி சார்பாக பகிரங்கமாக மன்னிப்பு கோருவதாகவும் உறுப்பினர் அ.மேரியம்மா தெரிவித்தார்.

# வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் குடியிருப்புக்களில் வெள்ளம்

வடமராட்சி கிழக்கில் பல இடங்கள் தொடர்ச்சியான மழை வீழ்ச்சியினால் வெள்ள அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

குறிப்பாக வடக்கு வெற்றிலைக்கேணி, செம்பியன் பற்று, கட்டைக்காடு, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை ஆகிய கிராமங்களே இவ்வாறு வெள்ள அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

மேற்படி கிராமங்களில் உள்ள மக்கள் குடியிருப்புக்களில் முழங்காலுக்கு மேல் வெள்ளம் தேங்கி நிற்கின்றன. இதனால் அப்பகுதி மக்கள் மேட்டு நிலங்களில் உள்ள தமது உறவினர் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேலும் மழை தொடரும் பட்சத்தில் உயிர் ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரித்துள்ளனர். அத்தோடு சனசமூக நிலையங்கள், பாடசாலை போன்ற பொது இடங்களிலும் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது. இதனால் அவற்றின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

மேற்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளாகும். (116)

# விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தங்கூசி வலைகள் யாழில் சிக்கின



(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைத் தேடிக் கைப்பற்றும் யாழ்.கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்தின் நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

இந்நடவடிக்கையின் போது யாழ்.நகர்ப் பகுதியில் விற்பனைக்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்த ஒரு தொகுதி தங்குகூசி வலைகளும் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.காக்கைதீவுப் பகுதியில் யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது ஒரு தொகுதி தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை அப்பகுதி மீனவர்களின் தகவலை அடுத்து யாழ்.நகர்ப் பகுதியில் தங்கூசி வலைகளை விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்தி வைத்திருந்த வியாபார நிலையங்கள் இரண்டில் இருந்து ஒரு தொகுதி தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ்.நகரில் அமைந்துள்ள ஐந்து விற்பனை நிலையங்களில் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நீதவான் நீதிமன்ற நீதிபதி நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நீதவான் நீதி மன்ற நீதிபதிகளாக குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தின் முன்னாள் நீதவான் சிறிமேவன் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நீதவான் நீதிபதியாக இருந்த ஜோய் மகிழ் மகாதேவா ஓய்வு பெற்றதையடுத்தே மேற்படி இடத்துக்கு இவருக்கான நியமனம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவானாக நியமனம் பெற்ற சிறிமேவின் நேற்று முதல் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (எப்.எஸ்)

# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரு தங்கராசா

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், தற்போது கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு தங்கராசா நேற்று (19.12.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராசா தங்கரெட்ணம் அவர்களின் அன்புக் கணவரும், சத்தியசீலன், சத்தியவாணி, சத்தியராஜன், சத்தியரூபன் ஆகியோரின் தகப்பனாரும், காலம் சென்ற அன்னம்மாவின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற தயாரட்ணம் மற்றும் யோகராசா (கல்வித் திணைக்களம் - திருகோணமலை), எஸ்.விஜயகுமாரி, ப.தவமலர், அ.இரவீந்திரதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நித்திய சுதாகரன், சத்திய பிரசாத், சத்திய நிருஜன், அஜித்குமார், அபிநஜன், நிதுஷா, நிதுசன், டானியல், சபிதா, ஏஞ்சல் ஆகியோரின் பேரனும், ரஞ்சித்குமார், சுதாஜினி, அனுஷியா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.12.2011) நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.இரவீந்திரதாஸன் (ஜே.பி) (மருமகன்),
(ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளரும்,
பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும்)

(C/139)

# லலித்குமார், குகனை கண்டுபிடிக்க அரசாங்கம் முயற்சி செய்யவில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற குழுவைச் சேர்ந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் அவரது தோழரான முருகானந்தன் ஆகியோர் யாழில் காணாமற் போனமை தொடர்பில் துப்புத் துலக்கக் கூடிய அறிகுறி எதையும் காணத் தவறியுள்ளதாக அரசாங்கத்தை ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், இந்த இருவருக்கும் என்ன நடந்தது என்பதை அறிவதற்கு அரசாங்கம் தவறிவிட்டதாக கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், காணாமற் போகும் நிகழ்வுகள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் மிகுந்த மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளனர். வடக்கு கிழக்கில் இடம் பெறும் ஆட்கடத்தல்கள், காணாமற் போதல்கள் என்பவற்றின் பின்னணியில் அரசாங்கம் சார்ந்த அரசியல்வாதிகளினால் பாதுகாக்கப்படும் ஆயுதக் குழுக்கள் உள்ளன.

இதேவேளை, வடக்கில் சரியான முறையில் மீள்குடியேற்றம நடைபெறவில்லை. கொத்தணி முறையிலான ஒரு குடியேற்றமே நடைபெறுகிறது. காங்கேசன் துறையில் மட்டுமே 53 கொத்தணி குடியேற்றங்கள் காணப்படுவது இதற்கு உதாரணமாகும்.

இந்த அழுத்தங்களுக்கு நீண்டகாலம் மக்களால் நின்றுபிடிக்க முடியாது என்பதால் மீண்டுமொரு போராட்டம் தொடங்கும். எனவே வடக்கில் நல்லிணக்கத்தை கொண்டு வரவும், சிவில் நிர்வாகத்தை மீண்டும் கொண்டு வரவும் அரசாங்கம் நேர்மையாக முயற்சிக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

# மீள்குடியேறிய மக்களின் தேவை ஆராய 6 குழுக்கள் அமைப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டங்களை தயாரிக்கவென 6 உயர் மட்டக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்ட அபிவிருத்திக குழுவின் தலைவரும், கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரது தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி செயலணியின் செயலாளர், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அரசாங்க அதிபர்கள் மற்றும் வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர், வடக்கிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் மீள்குடியேறுவதில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் தற்போது மீள்குடியேறியுள்ள மக்களின் தேவைப்பாடுகள் அதற்கான நடைமுறை செயறபாட்டுத் திட்டங்கள் குறித்து இந்த கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டதுடன் 6 உயர்மட்டக் குழுக்களும் இங்கு நியமிக்கப்பட்டன.

வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் இரு குழுக்களும் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களை கொண்ட 4 குழுக்களும் இங்கு ஏற்படுத்தப்பட்டன. விவசாயம், கல்வி, சுகாதாரம், காணி, வீதி, கூட்டுறவு, மீன்பிடி சம்பந்தமாக தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக வேண்டிய தமது ஆலோசனைகளையும் செயற்றிட்டங்களையும் இக்குழு சமர்பிக்கவேண்டும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் துறைசார்ந்த உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஜனவரி மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் தமது அறிக்கையினை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.